RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 29, 17 யூன் 2022 இதழ்:- 08

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd,
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com


ஈழநாடு
மின்னிதழ்
eelanadu.ca

கோத்தா + ரணில் அசுத்தக் கூட்டா?

வரும் ஆனால் வராது இது ஒரு நவீன ஆக்கிரமிப்பு யுக்தி

பாரம்பரிய இனத்துவ தேசியவாதத்தின் தோல்வி

# ஜெனிவாவில் இறுகப் போகும் இலங்கை!




இலங்கையின் தற்போதைய நெருக்கடி குறித்தும் அதன் காரணமாக சர்வதேச அரங்கில் இலங்கைக்கு ஏற்படப் போகின்ற சர்வதேச அழுத்தம் குறித்தும் இரு அமெரிக்க முக்கியஸ்தர்கள் எச்சரித்துள்ளனர். அவர்களில் ஒருவர் அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகார குழுத் தலைவர் ரொபட்மெனென்டஸ் மற்றையவர் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜஜீலி சங். இந்த இரு அமெரிக்க முக்கியஸ்தர்களினதும் எச்சரிக்கையை நோக்கும் போது சர்வதேச சமூகம் எவ்வளவு தூரம் இலங்கையை உற்று நோக்கி வருகின்றதென்பதையே அறிய முடிகின்றது. இலங்கையில் வடக்கு-கிழக்கு யுத்தம் நிலவிய காலத்தில் இந்தக இரு மாகாணங்களிலும் நிலவிய மனித அவலம் இன்று முழு(3ம் பக்கம் பார்க்க)

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund
Desjardins Manulife Foresters

## அமெரிக்கா - சீனா தூதுவர்களின் சந்திப்பு?

## மனிதஉரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதே மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கான அடிப்படை



அரசியலமைப்பின் மூலமான பாதுகாப்பு மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதிப் படுத்துவதே பொருளாதார மீட்சியை முன்னிறுத்திய கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கான அடிப்படைகளாகும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி சுட்டிக் காட்டியுள்ளார். (5ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு 120 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் அனுமதி

அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபை இலங்கைக்கு புதிதாக 120 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்காகவும் ஆதரவாகவும் 120 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு(4ம் பக்கம் பார்க்க)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

**கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி! போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! யூன் 20 முதல் 30 வரையான நாட்களுக்கு உணவளிக்க எவரும் இல்லை! முன் வாருங்கள்!**

BUY/SELL HOUSES
ARUL
THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
Licence # 10530
1-877-366-3487

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




18 Years Real Estate Experience


HOMELIFE HIGHER STANDARDS

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Central Park / Bramalea

**Brampton** 674,900
Bedrooms: 3 Washrooms: 2
Lots Of Upgrades, Neutrally Painted

### Park Rd / Wentworth

**Oshawa** $499,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Well Maintained Complex

### Kennedy & Progress


**Scarborough** $548,000
Bedrooms: 2 Washrooms: 1
Ground Floor Unit, Great Location


### Eglinton/Markham


**Scarborough** $624,900
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept, Very Large Rooms

### Lawrence/ Galloway

**Toronto** $499,900
Bedrooms: 4 Washrooms: 2
New Hardwood Floors Throughout

### Mccowan/401

**Scarborough** $589,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Newly Renovated ,Open Concept

### Kennedy/401

**Scarborough** $599,900
Bedrooms: 1 Washrooms: 1
Close To High Way, Shopping Plaza


### Dixie/Clark

**Brampton** $629,900
Bedrooms: 3 Washrooms: 2
Upgraded & Spacious Corner Unit

### Eglinton/Markham

**Scarborough** $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated & Low Maintenance Free

### Yonge/Davis

**Newmarket** $1,699,000
Bedrooms:4+1 Washrooms: 5
Over 4000 Sq Ft

### Hwy 7/ Leslie

**Markham** $649,900
Bedrooms: 3+1 Washrooms: 3
Open Concept, Newer Paint

### Don Mills/Eglinton


**Scarborough** $549,900
Bedrooms: 3 Washrooms: 2
Location! Location! Location!

### Donald Cousens Pkwy / 16th Ave

**Markham** $1,499,999
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx. 2520 Sq Ft

### Meadowvale & Ellesmere

**Scarborough** $1,699,000
Bedrooms: 4 Washrooms: 4
$$$$ On Upgrades

### Brimorton/ Scar. Golf


**Scarborough** $1,100
Bedrooms: 1 Washrooms: 1
Basement Apartment for Rent

### Major Mack/Mccowan


**Markham** $2,900
Bedrooms: 4 Washrooms: 3
Throughout Hardwood Floor

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன் கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**


# ஜெனிவாவில் இறுகப் போகும் இலங்கை!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மனித அவலம் இன்று முழு நாட்டிலுமே நிலவுவதை அவதானிக்க முடிகின்றது. எரி பொருளுக்காகவும், சமையல் எரி வாயுவுக்காகவும் வேறு அத்தியாவசிய பொருட்களுக்காகவும் மக்கள் நீண்ட வரிசைகளில் நிற்பதைக் காண முடியும்.

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இந்த நிலைமை காணப்படுகின்றது. அரசியல் கராணங்களாலும் யுத்த நில வரங்கள் காரணமாகவும் மட்டுமல்ல. பொருளாதார நெருக்கடி காரணமாகவும் மனித அவலங்கள் ஏற்படுகின்றன. இலங்கையில் மூன்று தசாப்தகால யுத்தம் ஏற்படுத்திய அவலங்கள் அதன் காரண மாக முனைப்படைத்திருந்த அடிப் படை மனித உரிமைகள் மீறல்கள் என்பவை குறித்து ஜெனிவா மனித உரிமை பேரவையில் ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

ஆனால் தற்போது இலங்கையில் உருவாகியுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள மனித உரிமை கள் பிரச்சனைகள் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் குறித்தோ அல்லது மனித உரிமைகள் நிலவரம் குறித்தோ அரச தரப்பிலிருந்து. காத்திரமான நட வடிக்கைகள் இதுவரை எடுப்கப்படா துள்ள நிலையில் எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை மீது அழுத்தங்கள் அதிகரிப்பதற்கான சூழல் வலுப்பெறும் என்று இலங்கையிலுள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் அமெ ரிக்க தூதுவர் ஜுலி சங் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இதனை ஓர் எச்சரிக்கையாகவும் கொள்ள முடியும். ஏனெனில், வடக்கு – கிழக்கு மகாகாணங்களில் யுத்தம் கார ணமாக அடிப்படை மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்பட்டிருந்தன. அப்போதெல்லாம் சிங்கள மக்கள் மத்தி யில் இன ரீதியான கோஷங்களை முன் வைத்து யுத்தத்ததை முன்னெடுத்து அப்பாவி சிங்கள இளைஞர்களையும் அந்த யுத்தத்துக்கு ஆட்சியிலிருந்தோர் பலிக்கடாக்களாகியிருந்தனர். தென்னில



ங்கையில் இனவாதம் எவ்வளவு தூரம் முன்னெடுக்கப்பட்டிருந்தது என்பதை காலிமுகத்திடலில் அமைந்துள்ள கோட்டா கோ கம' ஆர்ப்பாட்டக்கார் களும் அவ்வப்போது குறிப்பிட்டு வரு கின்றனர்.

பதின் மூன்று இந்தோ – பசுபிக் நாடு களை உள்ளடக்கிய அமைப்பாக இருப்பது குவாட்'. இந்த அமைப்பிலு ள்ள வெளியுறவு பிரதிநிதிகளிடம் இலங்கையின் தற்போதைய நிலவரம் பற்றி எடுத்துக் கூறியபோதே அமெரிக்க செனட் சபை வெளிவிவகார குழு தலைவரான ரொபட் மெனென்டஸ் இலங்கை மனிதாபிமான பேரழிவின் விளிம்பில் இருப்பதாகக் கூறியிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் காலத்தில் நிதி மோசடிகள் இடம் பெற்றன என்றும் அமெரிக்க செனட்டர் ரொபட் மெனென்டஸ் கூறியிருப்பதோடு தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கை ஏற்கனவே சீனா உட்பட பல நாடுகளிடம் பெற்றுக் கொண்ட கடனை திருப்பிச் செலுத்து வதில் பாரிய சிக்கல்களை எதிர் நோக்கி யுள்ளார்.

இதன் காரணமாகவே இலங்கை பெரும் சிக்கல்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் கூறியுள்ளார். இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜீலி சங் இலங்கையின் இன் றைய நிலவரம் குறித்து சில சிவில் சமூக பிரதிநிதிகளிடம் கருத்து வெளி யிட்ட போது இலங்கையில் இடம்பெற்ற அடிப்படை மனித உரிமைக்ள மீறல்கள் குறித்து ஜக்கிய நாடுகள் மனித உரிமை கள் பேரவை அதன் அடுத்த கூட்டத் தொடர் எதிர்வரும் செப்ரெம்பரில் இடம் பெறும்போது நிச்சயமாக கவனத்தில் கொள்ளும் என்று தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பாக நிறைவேற்றப் பட்ட மனித உரிமைகள் பேரவை தீர்மா னங்கள் தொடர்பாக இலங்கை இது வரை எவ்வித கரிசனையையும் காண் பிக்கவில்லை என்பதையும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

இந்நிலையில் அமெரிக்க செனட்டர் மெனென்டஸ் மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜஜீலி சங் ஆகி யோர் குறிப்பிடுள்ளவற்றை நோக்கும் போது ஜெனிவாவில் இலங்கை மீதான அழுத்தம் நன்கு இறுகப் போவதையே அறிந்து கொள்ள முடிகின்றது.

# அதானி குழுமத்திற்கு எதிராகப் போராட்டம்

இலங்கை அரசாங்கத்திற்கும் இந்தியா வில் அதானி குழுமத்திற்கும் இடையில் இடம் பெற்றதாக கூறப்படும் இரகசிய கொடுக்கல் வாங்கல்களுக்கு எதிராக கொழும்பில் நேற்று 16 யூன் 2022 ஆர்ப் பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

காற்றாலை மின் திட்டம் நேரடியாக அதானி குழுமத்திற்கு வழங்குமாறு, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி தனக்கு அழுத்தம் கொடுக்கிறார் என்று ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ச தனக்குத் தெரிவித்ததாக இலங்கை மின்சார சபை யின் தலைவர் சி பெர்டினாண்டோ, நாடாளுமன்றக் குழு முன்னால் கூறிய மூன்று நாட்களுக்குப் பிறகு, 2022 ஜீன் 14 அன்று பதவி விலகினார்.

இலங்கையின் மன்னார் மாவட்டத்தில் 500 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரி சக்தி திட்டம் தொடர்பிலேயே இந்த கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் காற்றாலை மின் திட்டத்தை வழங்குவது தொடர்பில் இலங்கை மின்சார சபையின் தலைவர் தெரிவித்த கருத்தை இலங்கை ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ச திட்டவட்டமாக மறுத் துள்ளார். இந்தநிலையிலேயே இலங்கை அரசாங்கத்திற்கும் இந்தியாவில் அதானி குழுமத்திற்கும் இடையில் இடம் பெற்ற தாக கூறப்படும் இரகசிய கொடுக்கல்




வாங்கல்களுக்கு எதிராக இன்று கொழு ம்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள் ளது. முன்னதாக பம்பலப்பிட்டி மெஜ ஸ்டிக் சிட்டி முன்னால் ஆரம்பித்த பேரணி, மின்சார சபைக்கு முன் வந்த பின்னர், அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டுள்ளது.

இதேவேளை இந்திய கடன் எல்லை வசதியின் கீழ், எரிபொருள் தாங்கிய இறுதிக் கப்பல் நேற்று கொழும்பு துறை முகத்தை சென்றடைந்துள்ளது.

இந்தக் கப்பலில் 40, 000 மெட்ரிக் டன் டீசல் நாட்டுக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளது. இந்திய கடன் எல்லை வசதியின் கீழ், இலங்கைக்கு பல்வேறு கட்டங்களாக எரிபொருள் வழங்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 40,000 மெற்றிக் தொன் உராய்வு எண்ணெய்யை ஏற்றிக் கொண்டு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த கப்பல் (17) இன்றுடன் 52 நாட்களாக தரித்து நிற்கிறது.

குறித்த எரிபொருள் தாங்கி கப்பல் கடந்த ஏப்ரல் 26 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்திருந்த போதிலும், டொலர் பற்றாக்குறை கார ணமாக துறைமுகத்திலிருந்து கப்பலை விடுவிக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544

# இலங்கைக்கு 120 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் அனுமதி



அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபை இலங்கைக்கு புதிதாக 120 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளது

இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்காகவும் ஆதரவாகவும் 120 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபை அனுமதி வழங்கியுள்ளது

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜீலி சங் இதனை இன்று தெரிவித்துள்ளார். இலங்கை பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்காகவும் மக்களிற்கு ஆதரவாகவும் கடந்த 70 வருடங்களாக அமெரிக்கா வெளிநாட்டு உதவி கடன்கள் மற்றும் வர்த்தக வாய்ப்புகளை வழங்கியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு தனியார் துறையினருக்கு சிறந்த செய்தி என மேலும் தெரிவித்துள்ள அவர் டிஎவ்சியின் 120 மில்லியன் அமெரிக்க டொலர் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களை சென்றடையும் என குறிப்பிட்டுள்ளார்.

### இலங்கைக்கான உறுதியான ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்திய சீனா

நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கைக்கான தொடர்ச்சியான மற்றும் உறுதியான ஆதரவை சீனா மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கைக்கான சீன தூதுவர் கியூ சென் யொங் மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையில் 15 ஆம் திகதி இடம் பெற்ற சந்திப்பின் போதே சீன தூதுவர் இலங்கைக்கான தமது ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த சந்திப்பின் போது மானியங்கள், வர்த்தகம் மற்றும் முதலீடு உட்பட பல முக்கிய விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மீள செலுத்தப்பட வேண்டியுள்ள கடன்களை சரியான முறையில் கையாள்வதற்காக சீன வங்கிகளும் இலங்கையுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக உள்ளதாக இதன் போது தெரிவிக்கப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டு முயற்சிகள் மற்றும் திட்டங்களின் முக்கியத்துவம் குறித்து சீனத் தூதுவருடன் பிரதமர் விக்கிரமசிங்க கலந்துரையாடினார். தற்போதைய நெருக்கடியில் இலங்கையின் அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பில் கூட்டு முயற்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை இரு தரப்பும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான உத்வேகத்தை உருவாக்குவதற்கு இரு தரப்பு ஒத்துழைப்பு அத்தியாவசியமானது என்பதையும் அவர்கள் ஒப்புக் கொண்டதாக கொழும்பிலுள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

## நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாத ஆட்சியாளர்கள் பதவி விலக வேண்டுமென கர்தினால் மல்கம் வலியுறுத்து!

நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாத ஆட்சியாளர்கள், பதவிகளில் நீடிக்காது, விலக வேண்டும் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக்குவோம் என்றனர். இன்று யாசகம் பெறும் நிலையில் உள்ளோம். சுபீட்சத்தின் நோக்கு என்றார்கள், சுபீட்சம் எங்கே என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

மக்களுக்குச் சேவையாற்றவே அதிகாரம் வழங்கப்படுகின்றது. அந்த அதிகாரத்தை மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடாது. மக்களுக்குச் சேவையாற்ற முடியாவிட்டால் விலகுவதே சிறந்த செயலாக அமையும்.

மே 09ஆம் திகதி சம்பவத்தை அனுமதிக்க மாட்டோம். கொலைகள் மற்றும் வன்முறைகளைக் கண்டிக்கின்றோம். ஆனால், அந்த வன்முறை எங்கிருந்து ஆரம்பமானது என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும்' என்றார்.






ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

25 யூன் 2022 சனிக்கிழமை

சனிப் பிரதோஷ விரதம்

28 யூன் 2022 செவ்வாய்க்கிழமை

அமாவாசை விரதம்

05 யூலை 2022 செவ்வாய்– ஆனி உத்தரம்

உபயம்:– பாபு சாந்தி குடும்பம்

21 பெப் 2022 முதல் இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# மனிதஉரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதே மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கான அடிப்படை

அரசியலமைப்பின் மூலமான பாதுகாப்பு மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதே பொருளாதார மீட்சியை முன்னிறுத்திய கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கான அடிப்படைகளாகும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப்பிராந்தியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நாடு பாரிய பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், இது குறித்து கடந்த வாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க இந்நெருக்கடியிலிருந்து சமூகத்திலுள்ள பின்தங்கிய பிரிவினரை எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்து விளக்கமளித்திருந்தார்.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள், உலக உணவுத்திட்டம் மற்றும் உணவு மற்றும் விவசாய அமைப்பு ஆகிய கட்டமைப்புக்களின் மூலமான உதவிகள் என்பன தொடர்பில் தெளிவுபடுத்தியிருந்ததுடன், இந்தப் பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்படக்கூடிய வறுமை, மந்தபோசணைக்குறைபாடு உள்ளிட்ட சமூக ரீதியிலான தாக்கங்கள் குறித்தும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இவ்விடயம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் கருத்துக்களை மேற்கோள்காட்டி தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மனித




உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப்பிராந்தியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அப்பதிவில் அவர் கூறியிருப்பதாவது:

நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் அதேவேளை, சமூகத்திலுள்ள பின்தங்கிய பிரிவினரைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

இருப்பினும் அரசியலமைப்பின் மூலமான பாதுகாப்பை உறுதிப்படுத்தல், மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல் ஆகியவையே கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கான அடிப்படைத் திறவுகோளாகும்' என்று சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கா - சீனா தூதுவர்களின் சந்திப்பு?

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு 18 மாதங்கள் செல்லுமென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். இதேவேளை, நாட்டை மீட்பதற்கு வல்லரசுகளின் ஆதரவு தேவையென்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவ்வாறு குறிப்பிட்டிருக்கும் ரணில், இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், உதவிகளைப் பெறும் நோக்கில், விரைவில், சீனாவுடன் உரையாடவுள்ளதாகவும் தெரிவித்திருக்கின்றார். அதேவேளை பிறிதொரு முக்கிய விடயமொன்றும் இடம் பெற்றிருக்கின்றது. இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவுவது தொடர்பில், இலங்கைக்கான சீனத் தூதுவரும், இலங்கைக்கான அமெரிக்க தூதுவரும் நட்பு ரீதியாக கலந்துரையாடிருக்கின்றனர்.

சீனத் தூதரகத்தின் பக்கம் சென்றால் இந்தியத் தூதரகமும் அமெரிக்க தூதரகமும் தவறாக எண்ணிவிடுவார்களோ என்று தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் அஞ்சிக் கொண்டிருக்கும் போது, அமெரிக்க தூதுவர், சீனத் தூதுவருடன் உரையாடியிருக்கின்றார்.

இது ஒரு முக்கிய விடயமாக நோக்கப்படுகின்றது. அண்மையில், சீன வெளிவிவகார அமைச்சு, இலங்கையின் விடயத்தில், இந்தியாவுடனும், சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு தாம் தயாராக இருப்பதாக தெரிவித்திருந்த நிலையில்தான், இந்த சந்திப்பு இடம் பெற்றிருக்கின்றது.

இலங்கை விடயத்தில் அதிக கரிசனையுடன் இருப்பதான தோற்றமொன்றை சீனா வெளிப்படுத்த முயற்சிக்கின்றதா அல்லது, சீனா தனியாக சில விடயங்களை மேற்கொள்வதால் ஏற்படும் புவிசார் அரசியல் பதற்றங்களை தவிர்க்க விரும்புகின்றதா? ஆனால், அனைவரின் கவனமும் இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் மீதே குவிந்திருக்கின்றது. இவ்வாறானதொரு சூ ழலில், தமிழ்த் தேசிய அரசியல் தரப்புக்கள், இவையெல்லாம் தெற்கின் பிரச்னை, எங்களுடைய மக்களுக்கு ஏற்கனவே இதெல்லாம் பழக்கப்பட்ட ஒன்று தானென்று, கூறிவிட்டு அமைதியாக இருக்க முடியுமா?

பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட காலத்திலிருந்து, இந்தியாவே பிரதானமாக உதவி வருகின்றது. ஓர் உடனடி அயல்நாடென்னும் நோக்கில் தான், இந்தியா அதிகம் இந்த விடயத்தில் ஈடுபாடு காண்பிக்கின்றது. இந்த நிலையில், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு, ஏனைய நாடுகளின் உதவிகளும் தேவை. அதனை பெறும் முயற்சியிலேயே தற்போது, ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருகின்றார். இந்த விடயத்தில் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களை பலப்படுத்த வேண்டிய தேவைப்பாடு அனைவருக்கும் உண்டு. முக்கியமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உண்டு.

ஆனால், சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைக்கு வரும் வரையில் தாக்குப் பிடிப்பதற்கான வழிகளை ரணில் கண்டடைய வேண்டியிருக்கின்றது. அவற்றை கண்டடைந்தால் தான், மக்கள் வீதியில் இறங்குவதைத் தடுக்க முடியும். மக்கள் வீதிக்கு வரும் சூழல் உருவானால், நாடு அமைதியிழக்கும். பின்னர், அரசியல் ஸ்திரமற்ற சூழலில், நாடுகளின் ஆதரவை பெறுவது கடினமாகி விடும்.

இந்தப் பின்னணியில் தமிழ்த் தேசிய தரப்புக்கள் குறிப்பாக தமிழ்த் தேசியகூட்டமைப்பு, தேவையற்ற வகையில் ரணில் விக்கிரமசிங்கவோடு விவாதித்துக் கொண்டிருக்காமல், நாட்டின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது தொடர்பில் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை முன்வைக்க வேண்டும். இவ்வாறு பேசுவதால், தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் கோரிக்கைகள் பலவீனப்படப் போவதில்லை. ஏனெனில், இலங்கையின் மீது ஆர்வம் கொண்டுள்ள அனைத்து நாடுகளும், பிரதானமாக, தற்போது பொருளாதார நெருக்கடி தொடர்பில் தான் அவதானம் செலுத்துகின்றன. ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரும், (20ம் பக்கம் பார்க்க)

# சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை நிறைவடைந்ததும் இலங்கையில் அமெரிக்கா முதலீடுகளை ஊக்குவிக்கும்!

பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச சமூகம் ஆகியவற்றுடனான ஒருங்கிணைவின்கீழ் இலங்கையுடன் ஒன்றிணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் உறுதியளித்திருக்கும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி ஜே பிளின்கென், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்ததன் பின்னர் இலங்கையில் அமெரிக்காவின் முதலீடுகளை மேலும் ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.



பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி ஜே பிளின்கென் ஆகியோருக்கு இடையில் தொலைபேசி மூலமான கலந்துரையாடலொன்று 13 ஆம் திகதி திங்கட்கிழமை இடம் பெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலின் போது நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைவரம் குறித்து அமெரிக்க இராஜாங்க செயலாளரிடம் எடுத்துரைத்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க, இவ்வாறானதொரு சூ ழ்நிலையில் இரு நாடுகளும் மிகநெருக்கமாக ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதேவேளை சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்ததன் பின்னர் இலங்கையில் அமெரிக்காவின் முதலீடுகளை மேலும் ஊக்குவிப்பதற்கான ஆதரவை வழங்குவதாக அன்ரனி பிளின்கென் தன்னிடம் உறுதியளித்ததாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். மேலும் இக்கலந்துரையாடல் தொடர்பில் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தின் ஊடாகக் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி ஜே பிளின்கென் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். இன்று இலங்கையின் புதிய பிரதமர் ரணில் விக்ரம சிங்கவுடன் சிறப்பான கலந்துரையாடலொன்று இடம் பெற்றது. பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் மிகவும் சவாலான தற்போதைய காலகட்டத்தில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச சமூகம் ஆகிய வற்றுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி இலங்கை யுடன் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு அமெரிக்கா தயாராக இருக்கின்றது' என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று எதிர்வரும் சில நாட்களில் இலங்கைக்கு வருகை தரவுள்ள நிலையில் அவர்களுடன் செய்துகொள்ளும் உடன்படிக்கைகள் குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

ஐ.எம்.எப்புடன் தற்போது பணியாளர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டாலும் கூட இந்த ஆண்டு இறுதிக் காலப்பகுதியிலேயே ஐ.எம்.எப்பின் கடன் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணியாளர் மட்டத்திலான குழுவினரின் பிரதான நோக்கம் இலங்கையின் பொருளாதார திட்டங்கள் எவ்வாறானது என்பதையும், அரச செலவீனங்களை குறைப்பதும், வருவாயை அதிகரிக்க இலங்கை அரசாங்கத் திடம் உள்ள வேலைத்திட்டங்கள் என்ன என்பது குறித்து ஆராயும் விதமாக அமையும் என கூறப்பட்டுள்ள நிலையில், ஐ.எம்.எப்பின் கடன் திட்டம் இந்த ஆண்டு இறுதியிலேயே கிடைக்கும் எனவும், அவர்கள் இலங்கைக்கு வந்து உடன்படிக்கை செய்துகொண்டாலும் கூட கடன்களை வழங்க வாய்ப்புகள் இல்லை எனவும் அரச மட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE


Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



Phone : 416-289-9229

1200 Markham Road, Lower Level Units 5 and 7, Scarborough, Ontario M1H 3C3 (Markham/ Ellesmere)

# பௌத்த மேலாண்மையை கைவிடாத மனநிலையை ஒழிக்க முற்போக்கு சக்திகள் முன் வரவேண்டும் - சைவ மகா சபை



இத்துணை பொருளாதார நெருக்கடியிலும் வல்லாதிக்க பௌத்த மேலாண்மையை கைவிடாத மோசமான மனநிலை இத்தீவிலிருந்து ஒழிக்கப்பட முற்போக்கு சக்திகள் முன்வர வேண்டும் சைவ மகா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

கிழக்கு திருகோணமலை மண்ணில் அரங்கேற்றப்பட்ட விடயங்கள் இன்று வன்னி முல்லைத்தீவு மண்ணில் தொடர்கிறது .குருந்தூர் மலை ஆதி சிவபூமி திருமலையும் முல்லையும் சந்திக்கின்ற மணலாறு இதயபூமிக்கு அண்மித்ததாக உள்ளதே குருந்தூர் மலை.

பண்டார வன்னியன் ஆண்ட வன்னி அரசினதும் கூழங்கை சக்கரவர்த்தி எனும் மாகனது ஆட்சிக் காலத்திலும் முன்னைய குளக்கோட்டன் உட்பட்ட பண்டை தமிழ் மன்னர் ஆட்சி காலத்திலும் இந்த பெரு நிலப்பரப்பு மிகவும் உன்னதமான சைவத் தமிழ் பண்பாட்டு செழுமையுடன் காணப்பட்டத்திற்கு இலக்கிய, தொல்லியல் வரலாற்று ஆதாரங்கள் பல உள்ளன.

இவற்றை எல்லாம் மறுதலித்து தொன்று தொட்டு இன்று வரை தமிழர்களே மட்டும் வாழ்ந்து வரும் சிவபெருமானின் குறியீட்டு வடிவாகிய சூலத்துடன் ஆதி சிவ அய்யனாக பூர்வக் குடிகள் ஆயிரம் வருடங்களாக வழிபாடு செய்து வரும் சிவ பூமியின் வரலாற்றை திரிபுபடுத்த முனைவது மிகவும் மோசமான அறமற்ற செயற்பாடாகும்.

சிவ வழிபாட்டு பூமி என்பதை இங்கு அண்மைய ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் கண்டெடுக்கப்பட்ட பண்டைய தமிழ் மன்னர் கால எட்டுப் பட்டை தரா லிங்கமும் சான்று பகிர்கின்றது. இருப்பினும் இந்த இலிங்கம் கண்டெடுக்கப்பட்ட போது எழுந்த உணர்வு அலைகள் சிறிது சிறிதாக மழுங்ககடிக்கப் பட்டது..

தற்போது சைவத்தமிழர், சிங்கள பௌத்தர், முசுலிம்கள், கிறிசுத்தவர்கள் என முழுத் தீவின் இன மதக் குழுமங்களும் பொருளாதார நெருக்கடியால் அன்றாட வாழ்வில் அவலங்களை சந்தித்து வரும் நிலையில் வேக வேகமாக நீதிமன்ற உத்தரவையும் மீறி பழைய பாணியில் புதிதாக தூபியை நிறுவி புத்தரை நிலைநிறுத்த முயலும் செயற்பாடுகள் பகிரங்கமாக முன்னெடுக்கப் படுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

பொதுவாக புத்தர் போதித்த உண்மையான தர்மத்தை பின்பற்றுவோர் இவ்வாறான செயல்களை செய்யமாட்டார்கள். அதுவும் கர்மா கணக்கின் காரணமாகவே நாட்டில் இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும் பழைய மோசமான தவறுகளிற்கு பகிரங்கமாக பல இளையோர் கலைஞர்கள் தங்கள் ஆதங்கங்களை பொது வெளியில் பகிரங்கப்படுத்தி உள்ள இத்தருணத்தில் புரையோடி போய் இருக்கும் ஆறாத வடுக்களை மீள கிளற உண்மையான சிங்கள பௌத்தர்கள் அனுமதிக்க கூடாது என்பதே இந்த தருணத்தில் மனிதாபிமான சிந்தனைகளும் ஏழைகளின் பசிப்பிணி உடற் பிணி தீர்க்கும் பணிகளிலுமே முன்னுரிமை பெற வேண்டும் என விரும்பும் மனிதத்தை நேசிக்கும் சைவத்தமிழர்களின் பெருவிருப்பாகும் என்பதை சுட்டிகாட்டி நிற்கின்றோம் எனவும் தெரிவித்துள்ளது.

## இலங்கையில் உருவாகியுள்ள சர்ச்சையால் அதானி குழுமம் ஏமாற்றம்!



இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டம் குறித்து உருவாகியுள்ள சர்ச்சையால் ஏமாற்றமடைந்துள்ளதாக இந்தியாவின் அதானி குழுமம் தெரிவித்துள்ளது.

பெறுமதி மிக்க அயல்நாட்டின் தேவைகளை நிறைவேற்றுவதே எங்கள் முதலீட்டின் நோக்கம் பொறுப்புணர்வுள்ள பெருநிறுவனம் என்ற அடிப்படையில் எங்கள் தேசங்கள் எப்போதும் பகிர்ந்து கொண்டுள்ள இணைந்த செயற்பாட்டின் முக்கியமான அம்சமாக நாங்கள் இதனை கருதுகின்றோம் எனஅதானி குழுமம் தெரிவித்துள்ளது. உருவாகியுள்ள இந்த சர்ச்சை காரணமாக நாங்கள் ஏமாற்றமடைந்துள்ளோம் உண்மைஎன்னவென்றால் இந்த விடயத்திற்கு அரசாங்கத்திற்குள் தீர்வு காணப்பட்டுள்ளது எனவும் அதானி குழுமம் தெரிவித்துள்ளது.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students

Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.

Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை

பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# வரும் ஆனால் வராது
# இது ஒரு நவீன ஆக்கிரமிப்பு யுக்தி

வரும். ஆனா வராது என்று நடிகர் வடிவேலுவின் மிகப்பிரபலமான பகடி ஒன்றுண்டு. அதை இன்னும் பிரபலமாக்கிக் கொண்டிருக்கிறது இலங்கையின் இலங்கை அரசின் இன்றைய துயர நிலவரம்.

கடைகளில் “சமையல் எரிவாயு இருக்கா? என்று கேட்டால், தலையை உயர்த்திப் பார்க்காமலே இல்லை எனப் பதில் சொல்கிறார் கடைக்காரர். எப்ப வரும்? என்று கேட்டால் வரும், ஆனால் வராது என்கிறார்.

இதைக் கடந்து சிலவேளை பின்னேரம் வந்து பாருங்கோ அல்லது நாளைக்கு வரும் என்று அவர் சொன்னாலும் அந்தப் பொருள் அப்படி உரிய நேரத்தில் வருமென்றில்லை. அதற்கான உத்தரவாதமெல்லாம் முடிந்து விட்டது. அந்தக் காலமே மலையேறி எங்கோ போய்த் தொலைந்து விட்டது.

எரிவாயு மட்டும்தான் தட்டுப்பாடு என்றில்லை. அத்தனை பொருட்களுக்குமே தட்டுப்பாடு. பத்து மாதங்களுக்கு முன்பே 740 பொருட்களுக்கு மேல் இறக்குமதித் தடையை விதித்தது அரசாங்கம். இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விட இறக்குமதி செய்யப்படும் பொருட்களே அதிகம். ஏன் இறக்குமதியில் தான் நாடே ஓடிக் கொண்டிருந்தது என்று சொல்லலாம்.

1977இல் கொண்டு வரப்பட்ட திறந்த பொருளாதாரத்தின் விளைவு இது. அப்படியிருக்கும் போது மாற்று ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படாமல் ஒரே நாளில் இறக்குமதிக்குத் தடை என்றால் என்ன நடக்கும்?

இப்பொழுது கையிருப்பில் இருக்கும் பொருட்கள் எல்லாம் விற்றுத் தீர்ந்து விட்டால் பிறகு? கட்டுவதற்குக் கோவணமும் இருக்காது என்று ஒருவர் சொன்னது உண்மையாகப் போகிறது.

ஏற்பட்டிருக்கும் தீவிர பொருளாதார நெருக்கடியினால் இப்பொழுது டீசல், பெற்றோல் மட்டுமல்ல, மண்ணெண்ணையையும் பெற முடியாது என்றாகி விட்டது.

எரிவாயு இல்லை. அதற்குப் பதிலாக மண்ணெண்ணை அடுப்பைப் பயன்படுத்தலாம் என்று எல்லோரும் மண்ணெண்ணைக் குக்கரை வாங்கினார்கள். ஒரே நாளில் குக்கருக்குத் தட்டுப்பாடு. விலையும் மலைபோல ஏறியது. இப்பொழுது மண்ணெண்ணையும் இல்லை என்றால் என்ன செய்ய முடியும்?

மின்தடைக்கு மாற்றாக மண்ணெண்ணை விளக்கையாவது ஏற்றலாம் என்றால் அதற்கும் வழியில்லை. சைக்கிள் திருத்தம் செய்யும் கடைகளில் அந்த உதிரிப்பாகங்களைக் கழுவுவதற்கும் மண்ணெண்ணை இல்லை.

மின்சாரம் இல்லை, எரிபொருள் இல்லை, உரம் இல்லை என்றால் எப்படி விவசாயத்தைச் செய்ய முடியும்? அரிசியின் விலை மட்டுமல்ல காய்கறிகளின் விலையும் உச்சத்துக்குப் போய் விட்டது. விலை அதிகரித்தால் வீட்டுத் தோட்டம் செய்யலாம் என்றால், அதற்கும் மருந்தோ உரமோ தேவையே!

எரிபொருள் இல்லை என்பதால் கடலுக்குப் போக முடியாது. அதனால் மீன் பிடியும் இல்லை. இப்பொழுது ஒரு கிலோ மீனின் விலை 2000க்கு மேல். இந்த விலைக்கும் பொருள் கிடைப்பது அரிது.

இதையெல்லாம் சீர்ப்படுத்துவதற்குப் பதிலாக, இனிவரும் நாட்களில் ஒரு நாளைக்கு இருவேளை சாப்பிடும் நிலை வரலாம். பெரும் உணவுப் பற்றாக்குறைக்கு முகம் கொடுக்க நேரிடலாம். நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்கவில்லை என்றால் நிலைமை இன்னும் மோசமாகியிருக்கும் என்று கதை சொல்லிக் கொண்டிருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

நெருக்கடி நிலையில் மக்கள் துவண்டு கொண்டிருக்கும் போது, அதற்கான மாற்று நடவடிக்கைகளைச் செய்வதற்குப் பதிலாக நாட்டின் பிரதமர் ஒருவர் கதைக்கின்ற கதையா இது என்று எல்லோரும் முகத்தைச் சுழித்துக் கொள்கிறார்கள்.

ஆனாலும் எவருக்கும் மாற்று வழி தெரியவில்லை. இரண்டு வாரங்களுக்கு முன்பு ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு வேறு யாரும் முன்வராத போது இந்த ஆள் மட்டும் தான் வந்து ஒற்றை மனிதராகத் துணிந்து தலையைக் கொடுத்தார்.



அப்பொழுது பலரும் நம்பினார்கள், ரணிலுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவுண்டு. அந்த ஆதரவைக் கொண்டு நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று. ஆகக் குறைந்தது ஐ.எம். எவ்விடமோ உலக வங்கியிடமோ கடன்பட்டாவது சமாளித்துக் கொள்ளலாம் என. அதாவது ரணில் என்ற ஒற்றை மனிதரைக் கொண்டு நாட்டின் மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியைத் தணித்து விடலாம் என்று கனவு கண்டனர்.

ஆனால், அதே ரணில் என்ற ஒற்றை மனிதரைக் கொண்டே இலங்கையின் அரசியல் விதியைத் தமக்குச் சாதமாகக் கையாண்டு கொண்டிருக்கின்றன இந்தியாவும் அமெரிக்காவும். இதைப் பற்றிய பகிரங்கமான கருத்துகளுக்கு இந்த இரண்டு நாடுகளும் தொடர்ச்சியாக மறுப்புகளைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் உண்மை என்னவென்று எல்லோருக்கும் தெரியும்.

ஆக ரணிலை இலங்கை மக்களும் உள்நாட்டு அரசியற் சக்திகளும் கையாள்வதற்குப் பதிலாக வெளிச்சக்திகளே வெற்றிகரமாகக் கையாள்கின்றன. அவர்களுக்கே வெற்றி கிடைத்திருக்கிறது.

இந்த வெற்றிக்காகவே அவை கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகத் தீவிரமாகப் பாடுபட்டன. 2015க்கு முன்பு இலங்கையில் சீனா மிக வேகமாகச் செல்வாக்கடைந்து கொண்டிருந்தது. அந்தளவுக்கு இந்தியாவும் அமெரிக்காவும் பின்னடைந்து கொண்டிருந்தன.

ஒரு கட்டத்தில் இலங்கையின் வடக்கில் உள்ள தீவுகளிலும் சீனா காலூன்றப் போகிறது என்ற நிலை வந்தபோது இந்தியா முற்றாகவே கலங்கியது.

ஆனால் இன்று நிலைமை வேறு. இப்பொழுது சீனா மிகத் தொலைவுக்கு ஓரங்கட்டப்பட்டுள்ளது. இந்தியாவிடம் முழந்தாழில் மண்டியிட்டு இலங்கை உதவிகளைக் கோருகிறது. இந்தியாவும் கருணைக் கடாட்சமாக இலங்கைக்கு வரையறுக்கப்பட்ட அளவில் அருள் பாலிக்கிறது.

இது ஒரு நவீன ஆக்கிரமிப்பு உத்தி. நேரடியாக ஆக்கிரமிப்புச் செய்தால் அது உலக விவகாரமாகி விடும். இலங்கையின் உள்நாட்டிலும் அதற்கு எதிரான போராட்டங்கள் எழும். ஆகவே இதை வேறுவிதமாகக் கையாள்கிறது இந்தியா என்கிறார் பெயர் வெளிப்படுத்த விரும்பாத அரசியல் அவதானி ஒருவர்.

அவருடைய மொழியில் சொன்னால், இலங்கையின் மீது ஆக்கிரமிப்பு என்பதற்குப் பதிலாக இலங்கையைப் பராமரிப்புச் செய்கிறோம் என்ற விதமாக இந்தியா விடயங்களைக் கையாள்கிறது.

இதற்கு அமையவே காலிமுகத்திடல் போராட்டத்தையும் இந்தச் சக்திகள் பயன்படுத்துகின்றன என்றொரு பார்வையும் சிலருக்குண்டு.

இதன் அர்த்தம் அந்தப் போராட்டத்தை குறைத்து மதிப்பிடுவதல்ல. அதைப் போலக் கூட்டிப் பார்ப்பதும் அல்ல.

ரணிலுக்கு முன்பிருந்த மகிந்த ராஜபக்ஸ உள்ளிட்ட தரப்பினரை அதிகாரத்திலிருந்து அகற்றும் வரை மேற்படி சக்திகள் நிம்மதியாக இருக்க முடியாது.

காரணம், மகிந்த ராஜபக்ஸ எப்போதும் சீனாவுக்குச் சாய்வான நிலைப்பாட்டைக் கொண்டவர். அவருடைய அணியைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண, டி.யு.குணசேகர, விமல், தினேஸ் குணவர்த்தன உள்ளிட்ட பெரும்பாலானவர்களும் இதே மன நிலையைக் கொண்டவர்களே.

ஆக இந்த அணியை அதிகாரத்திலிருந்து இறக்கி, அந்த இடத்தில் ரணிலை அமர்த்தி விட்டால் நிலைமையைச் சாதகமாக்கிக் கொள்ளலாம் என்றே இவை விரும்பின. அதற்கு வாய்ப்பாக ராஜபக்ஸக்களின் நிர்வாகத்தில் இருந்த தவறுகளும் பலவீனங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் இயல்பாக இருந்த நெருக்கடிகளையும் அதிருப்தியையும் பயன்படுத்தி நிலைமை சூடேற்றப்பட்டது. மே முதல் வாரத்தில் நடந்த — நடத்தப்பட்ட — கொந்தளிப்புச் சூழலின் மூலம் மகிந்த ராஜபக்ஸ அணி பின்தள்ளப்பட்டது.

இப்பொழுது ரணில் — கோத்தபாய அணி அரங்கில் உள்ளது. அணி மாற்றமடைந்துள்ளதே தவிர, நாட்டின் நெருக்கடி நிலை அப்படியே தான் உள்ளது. ஆனால், ஒன்றை நாம் கவனிக்க வேண்டும் இது மேற்குறித்த வெளிச்சக்திகளுக்கு பயனாகியிருக்கிறது.

அவை இதன் முழுப்பயனையும் பெறுவதற்கு இன்னும் சில வேலைகளைச் செய்யவுள்ளன. இலங்கையின் அரசியலமைப்பில் மாற்றங்களைச் செய்ய நிர்ப்பந்திக்கின்றன. அரசியலமைப்பு மாற்றம் நிச்சயமாக ஏற்பட வேண்டும் என்பது மறுப்பதற்கில்லை. அதை இலங்கைத் தலைவர்களோ இலங்கை அரசியற் சக்திகளோ சிந்திப்பதற்குப் பதிலாக இவையே சிந்திக்கின்றன நிர்ப்பந்திக்கின்றன.

கடந்த நல்லாட்சி (2015 — 2019) காலத்தில் சர்வதேச சமூகத்தின் நிபந்தனை அல்லது ஆலோசனைகளில் ஒன்று அரசியலமைப்புத் திருத்தமாகும்.

அது அப்பொழுது சாத்தியமற்றுப் போனது. இப்பொழுது மீண்டும் அதை அவை வலியுறுத்துகின்றன வலுப்படுத்தப் போகின்றன.

அதுவரையிலும் நாட்டின் நெருக்கடி நிலையில் பாரிய முன்னேற்றம் எதுவும் ஏற்படாது. ஐ.எம்.எவ்வின் கடனுதவியிலிருந்து நாடுகளின் கொடைகள் வரையில் மட்டிறுத்தப்பட்டேயிருக்கும்.

ரணில் மெல்ல மெல்ல இதற்கான காய்களை நகர்த்திக் கொண்டேயிருப்பார். அவரால் இப்பொழுது நினைத்த மாத்திரத்தில் எதுவும் செய்ய முடியாது.

அதிகாரத்தில் அவர் பிரதமராக இருந்தாலும் நடைமுறையில் ராஜபக்ஸவினரின் கைகளே அரசாங்கத்தை இயக்குகின்றன. மொட்டுக்கட்சி என்ற பொது ஜன பெரமுனவின் தயவில் ஆதரவில் ஆதரவில்தான் ரணில் ஆட்சி நடத்த வேண்டியுள்ளது.

ஆனால் நெருக்கடி நிலை என்ற ஒரு விடயம் தவிர்க்க முடியாமல் இரு தரப்புக்கும் இருப்பதால் இழுபறிகளின் மத்தியிலும் இரு தரப்பும் சில விட்டுக் கொடுப்புகளை ஏற்றுக் கொள்ளல்களைச் செய்து சமாளித்துச் செல்ல வேண்டியுள்ளது.

இதில் யார் இறுதி வெற்றியடைவது (ரணிலா ராஜபக்ஸவினரா இந்தியா, அமெரிக்காவா அல்லது சீனாவா) என்பது ஒரு புறமிருக்கட்டும். இலங்கை எப்படி ஆகப்போகிறது என்பதே கேள்வி.

ஏனென்றால் இந்தளவுக்கு நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாத அளவுக்கு நிலைமை வந்து விட்ட பின்னும் இனவாதத்தை விட்டிறங்குவதற்கு எவரும் தயாரில்லை.

அரசியலமைப்பை பொருத்தமான முறையில் பல்லினத்தன்மைக்கு ஏற்ப மாற்றம் செய்யவும் எவரும் விரும்புகிறார்களில்லை. தமக்கிசைவான முறையில் மாற்றங்களை திருத்தங்களைச் செய்யவே முயற்சிக்கின்றனர்.

நாட்டில் பொருளாதார சீரமைப்பைச் செய்வதற்கோ, உற்பத்தியை மேம்படுத்துவதற்கோ எவரும் சிந்திப்பதையும் காணோம். எங்காவது கடன்பட்டு நிலைமைச் சீர்ப்படுத்திக் கொள்வோம் என்றே எல்லோரும் எண்ணுகிறார்கள்.

இதே நிலைமை நீடித்தால் அடுத்த ஆண்டு இலங்கையில் ஒரு லட்சம் பேருக்கு மேல் உணவின்மையினாலும் நோயினாலும் செத்து மடிந்து விடுவர்.

அதற்குள் மாற்றம் வருமா என்றால் வரும், ஆனால் வராது .



# Amma Pawn Broker

# அம்மா தங்கநகை அடைவு மாடம்



கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

1.0% முதல் 1.5% வரை

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

## அதிரடி சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861

# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# பாரம்பரிய இனத்துவ தேசியவாதத்தின் தோல்வி



கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யதீந்திரா –



இலங்கையின் பொருளாதார நெருக்கடி, இனத்துவ மற்றும் மதப் பிணைப்பு தேசியவாதம் தொடர்பில் கேள்விகளை முன்நிறுத்துகின்றது. கோத்தபாய ராஜபக்ஷவின் வெற்றியானது, சிங்கள பௌத்த தேசியவாதத்தின் மீளெழுச்சியாகவே நோக்கப்பட்டது. கோத்தபாயவும் சிங்கள பௌத்த இனத்தின் நவீன காவலனாகவே தன்னை முன்னிறுத்திக் கொண்டார்.

இந்த பின்புலத்தில் தான் தன்னை ஒரு சிங்கள பௌத்த தலைவனாக பிரகடனம் செய்தார். நான் தான் நீங்கள் தேடிய தலைவன் என்றார். இவைகளெல்லாம் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் எழுச்சிக்காக காத்துக் கொண்டிருந்த வர்கள் மத்தியில் புத்துணர்வையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.

கோத்தபாய ஒரு விடயத்தை திரும்ப திரும்ப வலியுறுத்திக் கொண்டிருந்தார். அதாவது, தமிழ் மக்களுக்கென்று பிரத்தியேக அரசியல் பிரச்சினைகள் இல்லை, அவர்களுக்கு பொருளாதாரப் பிரச்சனைகள் மட்டும் தான் இருக்கின்றது. இந்த அடிப்படையில், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தையான, 13ஆவது, திருத்தச் சட்டத்தைக் கூட நீக்க வேண்டுமென்பதில் கோத்தபாய ஆசை கொண்டிருந்தார். இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஹர்ஸ் வர்தன், முன்னிலையிலேயே 13வது திருத்தச் சட்டத்தின் பிளஸ்சும் மைனஸ்சும் இருப்பதாக குறிப்பிட்டார். இதன் மூலம், 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல் படுத்த முடியாதென்பதை சூசகமாக வெளிப்படுத்தினார்.

கோத்தபாயவின் அணுகு முறைகளை லிபியாவின் சர்வதிகாரியாக இருந்த முகமத் கடாபியின் கருத்தியலோடு ஒப்பிடலாம். கடாபியின் பார்வையில், தேசமென்பது ஒரு பெரிய பழங்குடி.

அதாவது ஒரு பெரிய குடும்பம். அவ்வாறானதொரு குடும்பத்திற்கு பிரத்தியேக அதிகாரப் பகிர்வு மற்றும் பிரத்தியேக நிர்வாக நிர்வாக நடைமுறைகள் அவசியமில்லை. ஆனால் கடாபிக்கும் கோத்தபாயவிற்கும் இடையில் ஒரு அடிப்படையான வேறுபாடு உண்டு.

அதாவது கோத்தபாயவின் பார்வையில் சிறிலங்கா (அப்பேரட்) என்பது, ஒரு பெரிய சிங்களப் பழங்குடி அல்லது பெரிய சிங்கள குடும்பம். இந்த கருத்தியலில் இருந்து தான் தமிழ் மக்களுக்கு என்று பிரத்தியேக பிரச்சினைகள் இல்லையென்னும் கோத்தபாயவின் பார்வை வடிவம் பெற்றது.

ஆனால், இன்றைய நிலைமை என்ன? தமிழ் மக்களுக்கு பொருளாதார ரீதியான பிரச்சினை மட்டும் தான் இருப்பதாக குறிப்பிட்ட கோத்தபாய ராஜபக்ஷ, சிங்கள மக்களின் பொருளாதார பிரச்சினைகளை கையாள முடியாமல் படுதோல்வியடைந்திருந்தார். அந்நிய சக்திகளுக்கு நாட்டை காட்டிக் கொடுக்க முற்படுவதாக எவர் மீது விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டதோ இப்போது அந்த ரணில் விக்கிரமசிங்கவின் தயவின் மூலம் தான் நாட்டை முன் நோக்கி கொண்டு செல்ல முடியுமென்னும் நிலைக்கு கோத்தபாய கீழிறங்கியிருக்கின்றார்.

உண்மையில் கோத்தபாய ராஜபக்ஷவின் தோல்வியென்பது, கோத்தபாயவின் தோல்வியல்ல. மாறாக, அவர் பிரதிநிதித்துவப்படுத்திய சிங்கள பௌத்த தேசியவாதத்தின் தோல்வியாகும். ஒரு நெருக்கடி நிலையில் நாட்டை தூக்கி நிறுத்துவதற்கு சிங்கள பௌத்த தேசியவாதம் கைகொடுக்கவில்லை. ஏனெனில், உலகத்தோடு ஊடாடக்கூடிய ஆற்றலை சிங்கள பௌத்த தேசியவாதம் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் அது, தாராளவாத விழுமியங்களைக் கண்டு அஞ்சுகின்றது. இலங்கையின் பௌத்த பீடங்கள் கிட்டத்தட்ட காவி தரித்த தலிபான்கள் போன்ற செயற்படுகின்றனர். இலங்கைத் தீவை கற்கால நிலையில் பேணிப் பாதுகாக்க விரும்புகின்றனர். இலங்கை முன்நோக்கி பயணிப்பதை ஏதோவொரு வகையில் தடுக்கும் சக்திகளாகவே தொழிற்படுகின்றனர். இதன் விளைவுகளையே, தற்போது இலங்கைத் தீவு எதிர் கொண்டு வருகின்றது. இலங்கையின் தேசிய வாதங்களின் எழுச்சியை உற்று நோக்கினால், ஒரு அடிப்படையான உண்மையை நாம் காணலாம்.

அதாவது, இன வெறுப்பே, தேசிய வாத எழுச்சியின் அஸ்திபாரமாக இருப்பதை காணலாம். இது தமிழ் தேசியவாதத்திற்கும் பொருந்தும். ஆனால் ஆரம்பகால தமிழ் எழுச்சியானது, சாதாரண சிங்கள மக்களை எதிர்ப்பதாக இருக்கவில்லை. சிங்கள மக்களையும் சிங்கள ஆளும் வர்க்கத்தையும் பிரித்து நோக்குவதாகவே இருந்தது. சிங்கள மக்களுடன் கூடிவாழும் வாழ்வையே அவாவி நின்றது.

ஆனால் தமிழ் தேசிய அரசியல் ஆயுதமயப்படுத்தப்பட்ட பின்னர் அதாவது, ஆயுத பலத்தின் மூலம் தான் உரிமைகளை வென்றெடுக்க முடியுமென்னும் அரசியல் புற நிலைமை உருவாகிய பின்னர், முன்னைய அனுகுமுறைகள் மாற்றமடைந்தன. சிங்கள ஆளும் வர்க்கத்தையும் சிங்கள மக்களையும் பிரித்து நோக்க வேண்டியதில்லை என்னும் பார்வை மேலோங்கியது.

இராணுவ நெருக்கடிகள் அதிகரிக்கின்ற போது, சிங்கள பொது மக்களையும் இராணுவ இலக்காக கொள்ளலாமென்னும் பார்வை அரசியல்மயப்படுத்தப்பட்டது. இந்த கருத்தியலின் அடிப்படையில் தான் விடுதலைப் புலிகளால் பொது மக்களின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை நோக்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் காலத்தில் தமிழ் தேசியவாத எழுச்சியென்பது, சிங்கள எதிர்ப்பின் உச்சமாகவே இருந்தது. சிங்களவர்களோடு சேர்ந்து வாழ முடியாதென்பதே விடுதலைப் புலிகள் தலைமையிலான தமிழ்த் தேசிய நிலைப்பாடாகும்.

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியோடு, விடுதலைப் புலிகளால் பிரதிநிதித்துவப் படுத்திய தமிழ்த் தேசியவாதமும் பெருமளவிற்கு வீழ்ச்சியுற்று விட்டது.

இன்றைய தமிழ்த் தேசியவாத அரசியல் ஆரம்பகால மிதவாத தமிழ்த் தேசியவாத அரசியல் ஆரம்பகால மிதவாத தமிழ்த் தேசிய நிலைப்பாட்டையே பிரதிபலிக்கின்றது. அதாவது, ஐக்கிய இலங்கைக்குள் வாழும் நிலைப்பாடு. ஆனால் போர் வெற்றி அரசியலுக்கு தலைமை தாங்கிய, ராஜபக்ஷக்களோ, சிங்கள — பௌத்த தேசியவாதமும், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை மீளவும் காலால் மிதித்தது. மீளவும் தமிழர் வெறுப்பை தெற்கில் பரப்பி, அதன் மூலம் தாங்கள் தொடர்ந்தும் அதிகாரத்திலிருப்பதற்கான தந்திரோபாயங்கள் தொடர்பிலேயே ராஜபக்ஷக்கள் சிந்தித்தனர்.

2019 தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து, கோத்தபாய ராஜபக்ஷ மகிந்தவின் காலத்து இனவெறுப்பு சிங்கள பௌத்த தேசியவாதத்தை அதன் இரண்டாம் நிலைக்கு எடுத்துச் செல்ல முற்பட்டார். உள்ளூரில் அதிகாரத்தை கைப்பற்றுதல் என்னும் ஒரே ஒரு இலக்கை மட்டுமே கொண்டு கையாளப்பட்ட சிங்கள பௌத்த தேசியவாத கருத்தியல், புதிய நெருக்கடிகளை எதிர் கொள்ளும் போது, வெறும் புஸ்வானமென்னும் உண்மையை இப்போது வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றது. அந்த வகையில் சிங்கள பௌத்த தேசியவாதத்தால் நாட்டை முன்நோக்கி கொண்டு செல்ல முடியாதென்னும் உண்மையும் இப்போது பட்டவர்த்தனமாகியிருக்கின்றது.

இப்போது இரண்டு தேசியவாதங்களின் வீழ்ச்சி அனுபவம் இலங்கைக்கு கிடைத்திருக்கின்றது. விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, பிரிவினைவாத தமிழ்த் தேசியவாதம் வீழ்ச்சியுற்றது. ராஜபக்ஷக்களின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, பாரம்பரிய தமிழர் விரோத சிங்கள தேசியவாதத்தின் தோல்வி வெளிப்பட்டிருக்கின்றது.

மேற்படி, இரண்டு தோல்வி அனுபவங்களிலிருந்தும் கற்றுக் கொள்வதன் மூலம் தான் இலங்கைத் தீவு முன்னோக்கி பயணிக்க முடியும். இதில் அதிக கடப்பாடும் பொறுப்புணர்வும் பெரும்பாண்மையினர் என்னும் வகையில் சிங்கள சிவில் சமூகத்தினருக்கு உண்டு. சிலர் இவ்வாறான தொரு கருத்தை முன்வைக்கலாம் மீளவும் ராஜபக்ஷக்கள் எழுச்சியுற்றால் என்ன செய்வது?

பதில் இலகுவானது. ராஜபக்ஷக்கள் போன்ற அரசியல் குழுவினரால் ஒரு போதும் தாராளவாத சிந்தனைகளை மக்கள் மத்தியில் விதைக்க முடியாது. இனவெறுப்பும் மதவாதமுமே அவர்களது அரசியல் மூலதனமாக இருக்கும். அவ்வாறானவர்கள் எழுச்சியுற்றால், இப்போது நாடு என்ன நிலையிலிருக்கின்றதோ அதுவே மீளவும் நிகழும். இலங்கைக்கு சிங்களவர்களுக்கு மட்டுமல்ல, தமிழர்களுக்கும் தாராளவாத சிந்தனைகளை முன்னிறுத்தக் கூடிய, உலகத்தோடு ஊடாடக்கூடிய தலைமைகளே தேவை. கடும் போக்கு வாதங்கள் பயனளிக்காது.


## கொழும்பில் 6 வீடுகள் விற்பனைக்கு!

**கொழும்பில் சிறப்பான குடியிருப்புப் பகுதியில் ஆறு வீடுகள், தொடர்மாடிக் குடியிருப்புக்கள் விற்பனைக்கு உண்டு.**

**மேலதிக விபரங்களுக்கு:-**
**B.Pradeep Chandrasekera - 011647 278 2568**
**Captain_Pardeep2011@yahoo.ca**

**B.S. Chandrasekera:-**
**0773920702 / 0778613943 / 0767621801**

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

11 யூன் 2022 முதல் 17 யூன் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:-

ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கனகசபை சங்கரப்பிள்ளை

புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய பொறியியலாளர் திரு கனகசபை சங்கரப்பிள்ளை அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 19 யூன் 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் கனகசபை சங்கரப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி லில்லிதிரேஸ் மயில்வாகனம்

கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி லில்லி திரேஸ் மயில்வாகனம் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 13 யூன் 2022 திங்கட்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி லில்லி திரேஸ் மயில்வாகனம் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர், நண்பர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு துரைச்சாமி தேவதாஸ்

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு துரைச்சாமி தேவதாஸ் (முன்னாள் FORUT- FOSDOO சமூக அபிவிருத்தி அமைப்புக்களின் ஒன்றிய முகாமையாளர்) அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாள் 17 யூன் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு துரைச்சாமி தேவதாஸ் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திரு இராஜேந்திரன் கந்தசாமி

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு இராஜேந்திரன் கந்தசாமி அவர்களது 31ம்நாள் நினைவுநாள் 12 யூன் 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.. திரு இராஜேந்திரன் கந்தசாமி அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வேலும்மயிலும் தங்கவடிவேல்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வேலும்மயிலும் தங்கவடிவேல் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 11 யூன் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வேலும்மயிலும் தங்கவடிவேல் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த் திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சுகிர்தாதேவி தங்கவடிவேல்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சுகிர்தாதேவி தங்கவடிவேல் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 11 யூன் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சுகிர்தாதேவி தங்கவடிவேல் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




11 யூன் 2022 சனிக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வேலும்மயிலும் தங்கவடிவேல், திருமதி தங்கவடிவேல் சுகிர்தாதேவி இணையரது முதலாவது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 யூன் 2022 சனிக்கிழமை செல்வன் மாக்சண் மகாதேவா செல்வி அபிரா சிவராஜன் ஆகியோரது திருமண நன்நாளாகும். அன்றையதினம் திருமண வாழ்வில் இணைந்த இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




11 யூன் 2022 சனிக்கிழமை புங்குடுதீவு. 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




12 யூன் 2022 ஞாயிற்றுக்கிழமை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு இராஜேந்திரன் கந்தசாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





12 யூன் 2022 ஞாயிற்றுக்கிழமை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு இராஜேந்திரன் கந்தசாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




12 யூன் 2022 ஞாயிற்றுக்கிழமை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு இராஜேந்திரன் கந்தசாமி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




12 யூன் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஜீவரெத்தினம் குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




13 யூன் 2022 திங்கட்கிழமை கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி லில்லிதிரேஸ் மயில்வாகனம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




14 யூன் 2022 செவ்வாய்க்கிழமை பிரம்டன் கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஜோசப் நந்தினி குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்





17 யூலை 2021 செவ்வாய்க்கிழமை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த (முன்னாள் FORUT- FOSDOO சமூக அபிவிருத்தி அமைப்புக்களின் ஒன்றிய முகாமையாளர் திரு துரைச்சாமி தேவதாஸ் அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




09 யூன் 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி இணையர்கள் புதுமனை புகுவிழா நிகழ்வை முன்னிட்டு அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.

## 30வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பத்மராஜ் ராஜா (பத்தன்)

யாழ்ப்பாணம் உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பத்தன் என்று அழை க்கப்படும் திரு பத்மராஜ் ராஜா அவர்களது 29வது ஆண்டு நினைவு நாள் 20 யூன் 2022 திங்கட்கிழமை யாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளு க்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு பத்மராஜ் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர் களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 27வது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.வைமன் வீதியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன் அவர் களது 27வது ஆண்டு நினைவுநாள் 16 யூன் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக 18 யூன் 2022 சனிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத் தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# வீடு மற்றும் வாகன காப்புறுதி
# HOME & AUTO INSURANCE

வீடு — HOME
வாகனம் — AUTO
மோட்டர் சைக்கிள் — MOTOR CYCLE
படகு — BOAT
கனரக வாகனம் — TRAILER

காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்





TR
FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!
**THUSHANTHAN RAVINDRAN**
**647-401-2653**



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community
### OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


உ

ஓம் சக்தி

# ஜெயதுர்க்கா தேவஸ்தானம் - மிசிசாகா

## சுபகிருது வருட மகோற்சவ விஞ்ஞாபனம்

விரவிநின்றொளிரும் வீரமும் துணிவும் மேதினி வாழ்பவர்க் கருளி
பறந்திடு விமானம் பதிந்து பின் இறங்கி பாங்குடன் ஏறிடும் வகையில்
தரைவழி கொண்ட மிசிசாகா பதியில் தான் நிலைத் தெம் மனம் கொள்ளும்
செருக்கழித்தாண்டு சீரருள்புரியும் ஜெயதுர்க்கை அம்பிகைத் தாயே.



**கொடியேற்றம்**
26-06-2022
ஞாயிறு

**மஞ்சம்**
05-07-2022
செவ்வாய்

**சப்பறம்**
08-07-2022
வெள்ளி

**தேர்**
09-07-2022
சனி

**தீர்த்தம்**
10-07-2022
ஞாயிறு

**பூங்காவனம்**
12-07-2022
செவ்வாய்

**அம்பிகை அடியார்களே!**

சகல வளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற கனடா நன்நாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஒன்ராரியோ மாநில மிசிசாகா மாநகரில் திருக்கோவில் கொண்டெழுந்தருளி வேண்டுவோர் வேண்டுவதை ஈய்ந்தருளும் ஜெயதுர்க்கா அம்பாளுக்கு மகோற்சவம் நிகழ திருவருள்கூடியுள்ளது. சுபகிருது வருடம் ஆனித் திங்கள் 12ம் நாள் (26-06-2022) கார்த்திகை நட்சத்திரமும், சித்த யோகமும் கூடியுள்ள நன்நாள் ஞாயிறன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனி மாதம் 26ம் நாள் (10-07-2022) ஞாயிறன்று தீர்த்த உற்சவத்துடன் 15 தினங்கள் திருவிழாக்கள் கலை நிகழ்ச்சிகளுடன் இனிதே நிகழ ஏற்பாடாகியுள்ளது. அன்பர்கள், அடியார்கள் அனைவரும் பகலும் இரவும் ஆலயத்திற்கு வருகை தந்து திருவிழா வழிபாடுகளில் கலந்து அம்பாள் அருள்பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

**1808 Drew Road, Mississauga, Ontario L5S 1J6**
**Telephone: 905-612-1856 • www.jeyadhurgatemple.com**

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases






Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth





TAX CENTRIC

**2338 Hurontario St., Unit 100A, Mississauga, ON L5B 1N1**

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு
அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Servicing clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph

- Personal Tax
- Corporate Tax
- Book Keeping & Accounting
- Payroll Services
- GST/HST Filing
- Corporate Services
- Business Startup
- Financial Planning



## Gayatiri Thavan
Tel: **289.569.0169** • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
**www.taxcentric.ca**

# கோத்தா + ரணில் அசுத்தக் கூட்டா?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



தனது பிள்ளைகள் மூன்று நாட்களாக பட்டினியில் வாடுவதை கண்டு, சகித்துக் கொள்ள முடியா, தாயொருவர் தற்கொலைக்கு முயற்சித்த சம்பவமொன்று வெல்லவாய பகுதியில் இடம் பெற்றுள்ளது. தந்தைக்குநிரந்தர தொழில் இல்லை. வேறு வருமான வழிகளும் இல்லை. இதனால் அக்குடும்பம் சுமார் 3 நாட்களாக நீரை மட்டுமே அருந்தி உயிர் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. இது முதலாவது செய்தி.

வெலிகேபொல, பிரதேசத்தில் கிராமத்தில் ஒரு வறிய பெண் நோயுற்ற தனது பிள்ளைக்கு உணவுக்கு எதுவும் இல்லை என்பதால் அருகிலுள்ள உறவினருக்கு சொந்தமான ஈரப்பலா மரத்தில் காயொன்றைப் பறித்து 100 ரூபாய்க்கு விற்றுள்ளார். அப்பணத்தில் 500 கிராம் அரிசியை வாங்கியுள்ளார். ஈரப்பலா பறிக்கப்பட்டதை அறிந்த உறவினர், கோபமுற்று அந்தத் தாயைத் தாக்கியுள்ளார். இது இரண்டாவது செய்தி.

கதிர்காமத்தில் மூன்று பிள்ளைகளின் தாயொருவர், ஒரு கிலோ அரிசி, 250 கிராம் சீனி, 200கிராம் கருவாடு மற்றும் பிஸ்கட் என்பவற்றை வாங்கிக் கொண்டு வீடு திரும்பியுள்ளார். வழியில் மீன் வியாபாரியொருவர் சைக்கிளில் வந்துள்ளார். சைக்கிளை நிறுத்தி மீன் வாங்கியுள்ளார். அப் பொழுது உணவுப் பொருட்கள் இருந்த பையை தரையில் வைத்துள்ளார். மீனை வாங்கிக் கொண்டு பையைப் பார்த்த போது பையைக் காணவில்லை. பையை யாரோ திருடி விட்டார்கள். இது மூன்றாவது செய்தி

தொடரும் உணவுத் தட்டுப்பாடு காரணமாக சிறுவர்கள் மத்தியில் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து வருவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே' சிறுவர் மருத்துவமனையின் குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா கவலை வெளியிட்டுள்ளார். அண்மை நாட்களில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 53 குழந்தைகளில் 11 பேருக்கு ஊட்டச்சத்து குறைபாடு உள்ளது என்றும் அவர்களில் நால்வருக்கு கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டின் அறிகுறிகள் தென்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். இது நாலாவது செய்தி.

கடந்த 31ஆம் திகதி சவுத் சைனா மோர்னிங் போஸ்ற் என்ற இணைய ஊடகத்தில் ஒரு கட்டுரை வெளிவந்தது. அதில் பெண்கள் மாதவிடாய் காலங்களில் அணியும் சுகாதார பாதுகாப்பு நப்கின்களின் விலை அதிகரித்த காரணத்தால் பாடசாலைக்குச் செல்லும் மாணவிகள் அவதிப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. மாதவிடாய் காலங்களில் பள்ளிக்கூடம் செல்வதை தாங்கள் தவிர்ப்பதாக மாணவிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

இறக்குமதி செய்யப்படும் நப்கின்களுக்கு அரசாங்கம் 58 விகித வரி அற விடுகிறது. இதனால் வெளிநாட்டு நப்கின்களை வாங்க முடியாத ஒரு நிலைமை. வறிய பெண்கள் பெருமளவுக்கு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நப்கின்களை பயன்படுத்தப்படுவதாகவும், ஆனால் அவற்றின் விலையும் அதிகரித்திருப்பதால் பல குடும்பங்கள் அவற்றுக்காக காசை செலவழிக்க முடியாமல் இருப்பதாகவும் கூறப்படுகிறது. நப்கினா சாப்பாடா என்று கேட்டால் சாப்பாடு தான் முக்கியம் என்று பல குடும்பத்தலைவிகள் கருதுவதாகத் தெரிகிறது.

இதனால் நப்கின்கள் இல்லாத காரணத்தால் பல மாணவிகள் பள்ளிக்கூடம் வருவதில்லை என்றும் அக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மிக வறிய பெண்கள் விலை கூடிய நப்கின்களை வாங்குவதற்கு பதிலாக சீலைத் துண்டுகளை பயன்படுத்துவதாகவும் அது சுகாதாரமற்றது நோய் தொற்றுக்கான காரணிகளில் ஒன்று என்று எச்சரிக்கப் பட்டிருக்கிறது. இது ஐந்தாவது செய்தி.

கடந்தமாதம் 28ஆம் திகதி தெடெலிகிராப் இணையத்தளத்தில் வெளிவந்த மற்றொரு கட்டுரையில் ஆடைத் தொழிற்துறையைச் சேர்ந்த ஒரு தொகுதி பெண்கள் வேலையின்மை ,வறுமை காரணமாக பாலியல் தொழிலை நோக்கிச் செல்வதாக கூறப்பட்டுள்ளது. இது ஆறாவது செய்தி.

இது தான் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னரான நாட்டின் நிலை. எனினும் அவர் பதவியேற்ற பின் ஒரு விடயத்தில் மிகவும் தெளிவாக காணப்படுகிறார். நாட்டில் எந்தப் பொருள்? எவ்வளவு கையிருப்பில் உண்டு? எவ்வளவு நாடுக்குத் தேவை? எவ்வளவு கடனாகக் கிடைக்கும்? எப்பொழுது எந்த பொருளுக்கு தட்டுப்பாடு வரும்? எப்பொழுது பஞ்சம் வரலாம்? போன்ற எல்லா விவரங்களையும் அடிக்கடி வானிலை அறிவித்தலில் கூறுவது போல வெளிப்படையாகச் சொல்லி வருகிறார். அதனால் தான் ஒரு முஸ்லிம் நண்பர் முகநூலில் பின்வருமாறு எழுதினார்....

ரனில் விக்ரமசிங்கவை இலங்கை கிறிக்கட் அணித்தலைவராக நியமித்தால்....

அடுத்து வரும் போட்டிகளில் எமக்கு வீசுவதற்கு ஒரு பஞ்சு கட்டி கூட கிடைக்காது

இனி வரும் ஆட்டங்களில் இடைவேளையில் மூன்று மிடறு தண்ணீருக்கு பதிலாக இரண்டு மிடறு தண்ணீரையே பருக வேண்டி வரும்

ஒக்டோபர் மாதம் வரும் போது கிறிக்கட் மட்டைக்கு பதிலாக நாங்கள் தென்னம் மட்டையே பயன் படுத்த வேண்டிவரும்

உக்ரேன் வீரர்களுடன் கிறிக்கட்டும் அதே விக்கட்டால் ரஷ்ய வீரர்களுடன் கிட்டிப் புள்ளும் விளையாடுங்கள்

ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கும் புள்ளி விபரங்கள் உண்மையோ பொய்யோ அவர் நாட்டின் நிலைமையை ஒளிவு மறைவின்றி மக்களுக்கு தெரியப்படுத்துகிறார் என்ற ஒரு தோற்றத்தை வெற்றிகரமாக கட்டியெழுப்பி விட்டார். ஆனால் இது மக்களுக்குப் பீதியூட்டும் நடவடிக்கை என்றும் இதனால் வர்த்தகர்கள் பொருட்களைப் பதுக்குகிறார்கள் என்றும் ஒரு விமர்சனம் வருகிறது.

ஆனால் இது விடயத்தில் ரணில் விக்கிரமசிங்கவிடம் வேறு உள்நோக்கங்கள் இருப்பதாக தெரிகிறது.நாட்டின் நிலைமையை வெளிப்படையாக செய்வதன் மூலம் மக்களை அவர் நெருக்கடிக்கு தயார்படுத்துகிறார். மக்களை உஷாராக இருக்குமாறு எச்சரிக்கிறார். அதே சமயம் இந்த நெருக்கடிகளுக்குத் தான் பொறுப்பில்லை என்பதையும் மறைமுகமாக உணர்த்தப் பார்க்கிறார். அவர் கூறுவது போல விடயங்கள் நடக்கும் பொழுது அவர் உண்மையைத் தான் சொன்னார்,எதையும் மறைக்கவில்லை என்ற உணர்வு மக்கள் மத்தியில் பரவும். இது தன்னைப் பலப்படுத்த உதவும் என்று அவர் நம்புகிறாரா? வியட்நாம் விடுதலைப் போராட்டத்தின் தலைவர் கோசிமின் கூறிய மக்களிடம் செல்லுங்கள், மக்களுக்கு உண்மையைச் சொல்லுங்கள், மக்கள் உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தருவார்கள் என்ற மேற்கோளை ரணில் எப்படி விளங்கி வைத்திருக்கிறார்?


அவர் பிரதமராக வந்தபின் நாட்டுக்கு உள்ளேயும் நாட்டுக்கு வெளியேயும் நம்பிக்கைகளை கட்டியெழுப்ப வேண்டிய ஒருவராகக் காணப்படுகிறார். நாட்டுக்குள் அவ்வாறு நம்பிக்கைகளை கட்டியெழுப்பினாரோ இல்லையோ நாட்டுக்கு வெளியே படிப்படியாக நம்பிக்கைகளைக் கட்டியெழுப்பி வருகிறார் என்பது உண்மை.

ரூபாயை மிதக்க விட்டமை,சில பொருட்களுக்கான வரியை அதிகரித்தமை, வட்டி விகிதத்தைக் கூட்டியமை, விலைக் கட்டுப்பாட்டை நீக்கியமை, அரசு செலவினங்களை குறைத்தமை, சில அமைச்சுக்களின் செயலர்களாக இருந்த படைத்துறை பிரதானிகளின் இடத்துக்கு சிவில் அதிகாரிகளை நியமித்தமை, அமெரிக்காவினால் பயணத்தடை விதிக்கப்பட்ட சவேந்திர சில்வாவின் பதவியை மாற்றியமை ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை இடைநிறுத்தி குற்றம் சாட்டப்பட்ட சிலரை மீண்டும் கைது செய்தமை, பசில் ராஜபக்சவை நாடாளுமன்றத்திலிருந்து அகற்றியமை.போன்ற மாற்றங்களோடு, முக்கியமாக ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கும் விதத்தில் 21ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வரும் ஏற்பாடுகளையும் முன்னெடுத்து வருகிறார்.


மேற்கண்ட மாற்றங்களின் மூலம் நாட்டின் நீதித்துறை சுயாதீனமாக இயங்குகிறது என்ற ஒரு தோற்றத்தையும், நாட்டில் ராணுவமய நீக்கம் நிகழ்கிறது என்ற ஒரு தோற்றத்தையும், ராஜபக்சவின் அதிகாரம் குறைக்கப்படுகிறது என்று ஒரு தோற்றத்தையும் கட்டியெழுப்புவதே கோத்த-ரணில் கூட்டின் நோக்கமாகும். அப்படி ஒரு தோற்றம் கட்டியெழுப்பப்பட்டால் மேற்கு நாடுகளையும் ஐஎம்எப் போன்ற பன்னாட்டு நிறுவனங்களையும் கவரலாம் என்று ரணில் அரசாங்கம் சிந்திக்கிறது.

ஒருபுறம் இந்தியா நாட்டுக்கு சேலைன் ஏற்றிக் கொண்டிருக்கிறது. இந்தியா திட்டமிட்டு சிறுகச் சிறுக உதவிகளைச் செய்து வருகிறது. உடனடியாக பெருமெடுப்பில் உதவிகளைச் செய்யாமல், சேலைன் ஏற்றுவது போல துளித்துளியாக இந்திய உதவிகள் கிடைக்கின்றன. இதன்மூலம் இந்தியா தனது அருமையை உணர்த்த முற்படுகிறது. அதே சமயம், பெருமெடுப்பிலான உதவிகள் அடுத்தடுத்த மாதங்களில் ஐ.எம்.எப்பிடமிருந்து கிடைக்கலாம் என்று ரணில் விக்ரமசிங்க எதிர்பார்க்கிறார்.

குறிப்பாக 21ஆவது திருத்தத்தின்மூலம் ஐ.எம்.எப்,மேற்கு நாடுகள் எதிர்க்கட்சிகள், காலிமுகத்திடலில் போராடிக் கொண்டிருப்பவர்கள். ஆகிய நான்கு தரப்புக்களையும் திருப்திப்படுத்தலாம் என்று கோத்தா-ரணில் கூட்டு சிந்திக்கின்றது. ஐஎம்எப், காலிமுகத்திடலில் போராடிக் கொண்டிருப்பவர்கள் மேற்கு நாடுகள் போன்றன ராஜபக்சவை அதிகாரத்திலிருந்து அகற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். (22ம் பக்கம் பார்க்க)




சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# அண்ணாமலை ஏற்படுத்தியுள்ள அதிர்வுகள்!

**கட்டுரையாளர்: தமிழகத்தில் இருந்து**

**- குடந்தையான் -**

தமிழக அரசியலை எப்போதும் பரபரப்பாக வைத்திருப்பதில் பா.ஜ.க.வின் மாநிலத் தலைவரான அண்ணாமலைக்கு பெரும்பங்கு இருப்பதாக அண்மைய நாட்களில் அவதானிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர் தன்னை கட்சியில் நிலை நிறுத்திக் கொள்கிறாரா? அல்லது அவர் மூலம் கட்சி வளர்கிறதா? என்பது குறித்து துல்லியமாக அவதானிக்க இயலாத சூழலும் உள்ளது.

அதே தருணத்தில் தமிழகத்தில் எதிர்க் கட்சியாகத் திகழும் அ.தி.மு.க., அண்ணாமலைக்கும், அவரின் செயற்பாட்டிற்கும் எதிராக கருத்து தெரிவித்திருப்பதன் மூலம் இவரது வேகமான செயற்பாட்டிற்குக் கடிவாளம் போடுவதற்கு முயற்சிகளை எடுத்துள்ளது.

நாளாந்தம் தமிழக ஊடகங்களில் தமிழக அரசுக்கு எதிராக ஏதேனும் ஒரு விடயத்தை முன்னிறுத்தி விமர்சனம் செய்வதை தனது அரசியல் பாணியாக முன்னெடுத்து வருகிறார் தமிழக பா.ஜ.க. தலைவராக பொறுப்பேற்றிருக்கும் அண்ணாமலை.

முன்னாள் காவல்துறை அதிகாரியான இவர் தன்னுடைய பேச்சில், பிரதமர் மோடியைப் பற்றி துதி பாடுவதையும், அவரை எதிர்த்து யாரேனும் பேசினால் அவர்களை எச்சரிக்கும் வகையில் பேசுவதையும் வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார். அதேசமயத்தில் தமிழக அரசின் செயற்பாட்டை குறை கூறுவதிலும், தமிழக அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகளை சுமத்துவதையும் தான் வகிக்கும் மாநில தலைவர் பதவிக்கு ஏற்றது என்று நினைத்து செயற்படுகிறார். ஆனால் இது அவரது அரசியல் முதிர்ச்சியின்மையையே காட்டுகிறது.

ஏனெனில் ஏதேனும் ஒரு குற்றச் செயல்கள் நடந்தவுடன் அது தொடர்பான கருத்துகளை ஆராயாமல், பின் விளைவுகளையும் கருதாமல் கருத்துக்களை தெரிவிப்பதும் இவருடைய விவேகமற்ற அணுகுமுறையாகவே இருக்கிறது.

உதாரணத்திற்கு, தமிழக முதல்வர் அந்நிய முதலீட்டை ஈர்ப்பதற்காக அண்மையில் டுபாய் சென்றிருந்த போது அங்குள்ள லூலூ குழுமம் தமிழகத்தில் முதலீடு செய்வது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இதற்கு தமிழகத்திலுள்ள வணிகர்களிடையே எதிர்ப்பு ஏற்பட்டவுடன், அவர்களுக்கு ஆதரவாக பேசிய அண்ணாமலை, லூலூ குழுமம் தமிழகத்தில் ஒரு செங்கல்லை கூட கட்ட விட மாட்டேன் என ஆவேசமாக பேசினார்.

ஆனால் அண்மையில் லூலூ குழுமம் பா.ஜ.க. ஆளும் உத்தரப்பிரதேச மாநிலத்தில், அம்மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் முன்னிலையில் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. இது குறித்து அண்ணாமலை ஒரு வார்த்தை கூட எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

அதே போல் அவர் சுகாதாரத்துறை அமைச்சர் மா.பாலசுப்ரமணியம் மீது கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து தொகுப்பில் இடம் பெறும் பொருட்களுக்கான கொள்முதலில் இரண்டு தனி நபர்களுக்கு வாய்ப்பளித்து கோடிக்கணக்கில் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியதாக ஆதாரத்துடன் குற்றம் சாட்டினார்.

இதற்கு மறுப்பு தெரிவித்த சுப்பிரமணியன், அண்ணாமலையின் குற்றச்சாட்டு ஊகங்களின் அடிப்படையிலானது என்றும் அடிப்படை ஆதாரமற்றது என்றும் உறுதியாக மறுத்திருக்கிறார்.

அண்ணாமலையின் வேகமான செயற்பாட்டை விரும்பும் பலரும், அவர் அரசியல் களத்தில் பக்குவமாகவும், விவேகமாகவும், ஆணித்தரமாகவும் செயல்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கிறார்கள்.

அண்ணாமலையில் செயற்பாடு குறித்து அக்கட்சியின் மூத்த தலைவர்களே கடும் அதிருப்தியில் இருப்பதாக கூறப்படுகின்றது. அண்ணாமலையின் செயற்பாடு, தமிழக பா.ஜ.க.வின் முன்னாள் தலைவர்களான தமிழிசை சௌந்தரராஜன், எல்.முருகன் ஆகியோரைக் காட்டிலும் ஆக்கபூர்வமாக இருந்தாலும், கட்சிக்கு பலன் இல்லை என்றும், அவருக்கு மட்டும் தான் பலன் கிடைத்து



வருகிறது என்றும் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

அண்ணாமலை, தனது இலங்கை, ஆந்திரா, தெலுங்கானா மற்றும் வட இந்திய பயணம் போன்றவற்றை கட்சியில் தன்னை வளர்த்துக் கொள்வதற்காக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்ற குற்றச்சாட்டுக்களும் உள்ளன. விரைவில் அவரும் ஏதேனும் ஒரு மாநிலத்திற்கு ஆளுநராகவோ அல்லது மத்திய அமைச்சராகவோ கட்சியின் தலைமையால் நியமிக்கப்படக் கூடும் என்றும் அதிருப்திகள் உள்ளன.

அண்மையில் கூட்டம் ஒன்றில் பேசிய அண்ணாமலை 2024 ஆம் ஆண்டு நடைபெறும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் இருந்து 25 பா.ஜ.க. உறுப்பினர்கள் வெற்றி பெற வேண்டும், அவர்களில் 5 பேர் மத்திய அமைச்சர்களாக பதவியேற்க வேண்டும், இது தன்னுடைய விருப்பம், இதனை மக்கள் நிறைவேற்ற தயாராக இருக்கிறார்கள்” எனத் தெரிவித்தார்.இது நடைமுறைச் சாத்தியமா என்பதை அண்ணாமலையே உணரவில்லை.

தமிழகத்தில் தி.மு.க. ஆளுங்கட்சி என்றால் பா.ஜ.க. தான் ஆரோக்கியமமாக செயற்படும் எதிர்க்கட்சி என்று பல இடங்களில் ஆவேசமாக அண்ணாமலை முழங்கியிருக்கிறார். இது கூட்டணியில் உள்ள அ.தி.மு.க.வுக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் அண்ணாமலையை கண்டிக்கும் வகையில் அ.தி.மு.க.வின் மூத்த தலைவரான பொன்னையன் சில கருத்துகளை முன்வைத்தார்.

முல்லைப் பெரியாறு பிரச்சினை, மேகதாது, காவிரி நீர் பிரச்சனை., போன்ற விடயங்களில் தமிழக பா.ஜ.க. தலைவரான அண்ணாமலை கவனமாக தவிர்த்து விடுவதாகவும், தேவையற்ற விடயங்களில் மட்டும் அவர் தன்னுடைய கருத்தை பதிவு செய்வதாகவும்” குறிப்பிட்டார்.

இருப்பினும் அண்ணாமலையின் அரசியல் செயற்பாட்டை உற்றுநோக்கும் போது அவர் இரண்டு வித அதிர்வை ஏற்படுத்தியிருப்பதாக கருதப்படுகின்றது. ஒன்று அவரின் இலங்கை விஜயம். அது, இலங்கை தமிழ் மக்களை தங்களின் அரசியல் ஆதாயத்திற்காக பயன்படுத்திக் கொள்ளும் திராவிட கட்சிகளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இதன் எதிரொலியாக விரைவில் ஆளும் கட்சியாக இருக்கும் தி.மு.க.வின் தலைவர் ஸ்டாலின், இலங்கைக்கு பயணம் மேற்கொள்ள கூடும் என்று தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

இது தொடர்பாக அண்மையில் முதல்வர் ஸ்டாலின் நேரில் சந்தித்த இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவிடம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். அதன்போது முதல்வர் ஸ்டாலினை இலங்கைக்கு வருமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார். அவரது அழைப்பினை ஏற்றுக் கொண்டு, ஸ்டாலின் இலங்கை செல்லக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேதருணத்தில் அரசியல் ரீதியாக எந்தவித எதிர் விளைவையும் ஏற்படுத்தி விடக் கூடாது என்பதற்காக தி.மு.க., இவ்விடயத்தை மிகவும் கவனமாக கையாளும் என்றும், கொழும்பு அல்லது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நிறுவப்படவிருக்கும் திருவள்ளுவர் திருவுருவச் சிலை திறப்பு விழாவிற்கு முதல்வர் ஸ்டாலின் செல்லக்கூடும் என்றும் தகவல்கள் வெளியாகியிருக்கிறது.

மற்றொரு அதிர்வு கடந்த எட்டு ஆண்டுகளில் பிரதமர் நரேந்திர மோடி, தமிழகத்திற்கு வருகை தரும் போதெல்லாம் அவருக்கு எதிர்ப்பு என்பது இருந்து கொண்டே இருந்தது. ஆனால் அண்ணாமலை பா.ஜ.க. தலைவராக பொறுப்பேற்ற பிறகும், தி.மு.க. ஆட்சிக் கட்டிலில் ஏறிய பிறகும், முதன் முறையாக அரசு விழாவில் பங்கு பெற்ற பிரதமர் மோடி வருகை தந்த போது, எந்த எதிர்ப்பும் இல்லாமல், ‘வணக்கம் மோடி’ என மோடியை தமிழக மக்களும், ஆளுங்கட்சியான தி.மு.க.வும், எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வும் வரவேற்பு அளித்தது இவரின் மற்றொஸ்ரீஸ்ரீ

பொதுவாக அரசியல் கட்சிகளின் தலைவர்கள், ஆளும் கட்சி மீது குற்றம் சுமத்தி கண்டன அறிக்கைகள் அல்லது ஆர்ப்பாட்டங்கள் நடத்துவர். ஆனால் தமிழக பா.ஜ.க. தலைவரான அண்ணாமலை, கண்டன அறிக்கைகளை விடுவதுடன் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி, முற்றுகைப் போராட்டத்தையும் முன்னெடுப்பதால் அவருக்கு விளக்கமளிக்க வேண்டிய கட்டாய அவசியத்தை, அவர் அரசியல் தளத்தில் உருவாக்கி விடுகிறார். இதன் காரணமாகவே தமிழக அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாக அண்ணாமலை உருவெடுத்து விட்டதாக கருதப்படுகின்றது.




# இலங்கையின் யதார்த்த நிலைமையை மக்களுக்கு புரிய வைக்க அரசியல் தலைமைகள் இன்னும் தயாரில்லை!

நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்குத் தீர்வு எப்போது கிடைக்கும்? எப்படிக் கிடைக்கும் என்பதே இன்று மக்களின் மனதில் உள்ள ஆயிரம் டன் கேள்வியாகும். புதிய பிரதமர், (பழைய ஆட்களுடன்) புதிய அமைச்சரவை என்ற பிறகும் நெருக்கடி தீருவதாக இல்லை. பதிலாக மேலும் பொருட்களின் விலை கூடியிருக்கிறது. பஸ் மற்றும் போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பொருட் தட்டுப்பாடு நீங்கவில்லை.

அப்படியென்றால் அடுத்து என்ன நடக்கும்? எப்படி இனி வரும் நாட்களைச் சமாளிப்பது? இதன் முடிவென்ன?

இந்த மாதிரிக் கேள்விகள் மக்களிடம் விடை பெருந்தீயாக எழுந்துள்ளன. கேள்வி மட்டுமல்ல, எதிர் காலத்தைக் குறித்த அச்சமும் உருவாகியுள்ளது. இது போர்க்கால அச்சத்தையும் விடப் பயங்கரமானது. அப்போது இந்த மாதிரி எல்லோரும் கஸ்ரப்படவில்லை. ஏதேனும் சில வழிகளில் ஒரு சிறிய இடைவெளியோ ஆறுதலோ இருக்கும். அங்கே மரணம் தான் பெரிய பிரச்சினை. இங்கே மரணத்தைத் தவிர அனைத்தும் பிரச்சினை. அது உயிரை மாய்ப்பது. இது உயிரோடு வைத்து மாய்ப்பதாகும்.

நெருக்கடி நீளும் போது சனங்களின் சேமிப்பு சடுதியாகக் கரைந்து போகும். அப்படித்தான் போய்க் கொண்டிருக்கிறது. கையிலே எவ்வளவு பணத்தைக் கொண்டு போனாலும் பையிலே பொருள் சேருதில்லை. வருமானத்தை விடப் பன்மடங்கு செலவீனம் ஏற்படுகின்றது. அந்தளவுக்கு நாட்டின் பொருளாதார நெருக்கடி வாழ்க்கைச் சுமையை ஏற்றி விட்டுள்ளது. சமாளிக்கவே முடியாமல் திணறுகின்றன பல குடும்பங்கள். வறுமை சடுதியாக அதிகரிக்கப் போகிறது. வறுமை ஒழிப்புக்கான சமுர்த்தி உட்பட அரசாங்கத்தின் வேலைத்திட்டம் அத்தனையும் தோல்வியைத் தழுவப் போகின்றன. பதிலாக வறுமைப் பெருக்கமே நிகழவுள்ளது.

நுண்கடன்களால் பாதிக்கப்பட்டிருந்த பல்லாயிரம் குடும்பங்களுக்கு கடன் நீக்கம் செய்யப்படும் என்ற உத்தரவாதத்தை மத்திய வங்கி வழங்கியிருந்தது. இதைக்குறித்து பாராளுமன்றத்திலும் பலரும் வாக்குறுதியளித்திருந்தனர். ஆனாலும் அதொன்றும் நடைமுறைக்கு வரவில்லை. அதனால் பலர் தற்கொலை கூடச் செய்தனர். இருந்தும் நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை.

ஏறக்குறைய அதைப் போல இப்பொழுதும் பல விதமான வாக்குறுதிகள், உத்தரவாதங்கள் எல்லாம் வழங்கப்படுகின்றன. இதற்கெல்லாம், பெறுமதி என்ன, அர்த்தம் என்ன என்று யாரும் சிந்திப்பதில்லை. அந்தந்த நேரத்துக்கு எதையாவது சொல்லிச் சமாளித்து விடுவோம் என்றே சிந்திக்கிறார்கள். ஆனால், இது நிலைமையைச் சீராக்காது. பதிலாக உள்ளே தணலாகக் கொதித்துக் கொண்டேயிருக்கும். அந்தத்தணல் என்றோ ஒரு நாள் தீயாகப் பற்றும். அதுவே இப்பொழுது ஏறக்குறைய நடந்து கொண்டிருக்கிறது.

இப்பொழுது தேவையானது, பிரச்சினையை மூடி மறைப்பதோ உடனடியாக எதையாவது செய்து சமாளித்துக் கொள்ளலாம் என்று கருதுவதோ அல்ல. இலங்கையில் இது தான் வழமை. எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணப்படுவதில்லை. எல்லாவற்றையும் ஆறப்போடுவது அல்லது இழுத்தடிப்பது. 70 ஆண்டுகளுக்கு மேலாக இனப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுபடவில்லையா? அதற்காக ஒரு பெரிய போரே நடந்து முடிந்த பிறகும் அதைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் எவருக்கும் இல்லை. அந்தப் போரில் ஒவ்வொரு குடும்பமும் சந்தித்த நெருக்கடிகளும் இழப்புகளும் அதிகம்.

நாடே பல்லாயிரக்கணக்கான மனிதர்களை இழந்தது. ஆனாலும் கூட இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற உணர்வு வரவேயில்லை. இந்த இனப்பிரச்சினையும் அதன் விளைவான போரும் உண்டாக்கிய பொருளாதார இழப்பு இன்றைய பொருளாதார நெருக்கடிக்குப் பிரதான



காரணம் என்பதைக் கூட பலரும் உணரத் தவறுகின்றனர். அப்படி உணர்ந்தாலும் அதைப் பகிரங்கமாகப் பேச அவர்கள் தயாரில்லை. இதையெல்லாம் மறைத்துக் கொண்டு எப்படி நம்முன்னே உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண முடியும்? முதலில் நாம் நம்முடைய மனக்கதவுகளைத் திறக்க வேண்டும். காலம் அதற்கான சூழலை உருவாக்கித் தந்துள்ளது. வரலாறு நமக்கு அருமையான வாய்ப்பைத் தந்துள்ளது.

இந்தப் பயங்கரமான நெருக்கடிக்குள்ளும் நமக்கு மிகச் சிறப்பான வாய்ப்புகள் கிடைத்துள்ளன. இதை அரசியல் தலைவர்களும் கட்சிகளும் சரியாகப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். வழமையைப் போல இனவாதத்தை விற்பனை செய்ய முயற்சிக்காமல், அப்படிச் சிந்தித்து மேலும் நாட்டைப் பாழ்படுத்தாமல், நாட்டையும் மக்களையும் கருத்திற் கொண்டு புதிதாகச் சிந்திக்க வேண்டும். திறந்த மனதோடு சிந்திக்க வேண்டும். அது ஒன்றே மீட்சிக்கான வழி. அதைச் செய்யாமல் வேறு தந்திரங்களைக் கையாண்டு இப்போதும் இந்த நிலைமையைக் கடக்க முற்படலாம் என்று சிலர் எண்ணக் கூடும். அப்படிக் கடந்து போனாலும் அது நீடித்த தீர்வைத் தராது. இன்னொரு கால இடைவெளியில் மீண்டும் இன்னொரு வடிவில் நெருக்கடி வந்தே தீரும்.

இப்போது பாருங்கள், போர் முடிந்து விட்டது. இனிப் பிரச்சினை இல்லை என்றே பலரும் எண்ணினார்கள். குறிப்பாக சிங்கள மக்களிடம் இந்த உணர்வு மேலும் வலுத்திருந்தது. ஆனால் என்ன நடந்தது?

இப்பொழுது சமைப்பதற்கே வழியற்ற நிலை வந்திருக்கிறது.

ஆகவே இனியும் தாமதிக்காமல், நாடு எதிர்கொண்டுள்ள நிலைமையைப் பற்றி வெளிப்படையாக மக்களுக்குச் சொல்லி, அவர்களைத் தயார்ப்படுத்த வேண்டும். மக்களுக்கு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சொல்லியிருக்கிறார். ஆனால் அந்த உண்மையை எப்படிச் சொல்ல வேண்டும் என்பது முக்கியமானது. ஏனென்றால் சொல்லப்படுகின்ற உண்மை சரியான முறையில் மக்கள் புரிந்து கொள்ளவில்லை என்றால், சொல்லப்படும் உண்மை முழுமைப் பட்டதாக இல்லை என்றால், அது நிலைமையின் தாற்பரியத்தைப் புரிந்து கொள்வதற்கு உதவவில்லை என்றால் என்னதான் சொல்லியும் பிரயோசனமில்லை. நிலவரத்தைப் பற்றிய உண்மையைச் சொல்வது என்பதோடு அதற்கான மாற்று வழிகள் என்ன? அதில் யாரெல்லாம் பங்கேற்க வேண் டும்? அந்தப் பங்கேற்பும் பங்களிப்பும் எப்படி இருக்க வேண்டும் என்பதும் கூடச் சொல்லப்படுவது அவசியம். முக்கியமாக தேசிய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மக்களின் பங்களிப்பின் அவசியத்தைப் பற்றி சரியாக விளக்க வேண்டும். அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைந்து பங்களிப்புச் செய்யும் போதே மாற்றங்களை உண்டாக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இதெல்லாம் செய்யப்படுவதாக இல்லை. இதில் அக்கறை இருப்பதாகவும் இல்லை. பலருடைய அபிப்பிராயமும் அல்லது எதிர்பார்ப்பும் என்னவென்றால் எங்காவது கடன்பட்டு எப்படியாவது நிலைமையைச் சீராக்கி விடுவார்கள். அதற்குப் பிறகு சுமையில்லாமல், நெருக்கடிப் படாமல் சீவித்துக் கொள்ளலாம் என்பதாகவே உள்ளது. அரசாங்கமும் கூட இப்படித் தான் சிந்திக் கிறது.

ஆனால், எங்கே கடன்படுவது? அந்தக் கடனை எப்படி அடைப்பது? அந்தக் கடனோடு சேர்ந்து வரும் நிபந்தனைகள் என்ன? அவை எப்படி நம்முடைய வாழ்க்கையைப் பாதிக்கும்?

இன்று இல்லாது விட்டாலும் நாளை நிச்சயமாக அந்தக் கடனை நாங்கள் திரும்பச் செலுத்தியே தீர வேண்டும். இல்லையென்றால் நாட்டையே அவர்கள் அடமானத்துக்கு எடுத்துக் கொள்ள நேரிடும். திரும்பக் கடனைச் செலுத்துவதாக இருந்தாலும் அதற்கு வழியென்ன? வட்டியென்ன? அது நம்முடைய பிள்ளைகளுக்கும் எதிர் காலச் சந்ததிக்கும் உண்டாக்கப் போகும் சுமை என்ன? என்ற விளக்கம் பலருக்கும் இல்லை.

இவ்வளவு காலமும் கடன்பட்டுச் சீவித்ததன் விளைவை இப்பொழுது அனுபவிக்கிறோம் அல்லவா. அதைப் போலத் தான் எதிர்காலத்தில் நம்முடைய பிள்ளைகளும் நெருக்கடியில் சிக்க நேரிடும். ஒரு எளிய உதாரணம், இப்பொழுது எரிபொருளின் விலை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அரசு வழங்கி வந்த மானியத்தை இடைநிறுத்தியுள்ளமையே ஆகும். அரசாங்கத்தின் மானியம் நிறுத்தப்பட்டவுடன் இறக்குமதியாகும் விலைக்கே எரிபொருளை விற்க வேண்டிய நிலை.

ஆகவே இந்த மாதிரி பல மானியங்கள் எதிர்காலத்தில் நிறுத்தப்படலாம். கடன் வழங்குநர்கள் சொல்லுகின்ற அறிவுரை ஆலோசனை இது. ஏனென்றால் அவர்கள் தங்கள் கடனை முதலீட்டை எப்படித்திரும்பப் பெற்றுக் கொள்வது என்பதிலேயே குறியாக இருப்பார்கள். அவர்களுக்கு தங்கள் லாபம் முக்கியமே தவிர, மக்கள் நலன் அல்ல. ஆனால், அரசாங்கத்துக்கு லாபத்தை விட மக்கள் நலனே முக்கியமாக இருக்க வேண்டும். மக்களைப் பாதுகாப்பதற்கே அரசாங்கம் உள்ளது. அந்தப் பொறுப்புடன்தான் அது சிந்திக்க வேண்டும். நடக்க வேண்டும். கடன் வாங்குவது எளிதல்ல. அதை விட அது ஆபத்தானது. நம்முடைய இறைமையை அது நாசமாக்கக் கூடியது என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியம். தவிர்க்க முடியாமல் இப்பொழுது நாம் கடன் பட்டே தீர வேண்டும் என்றால், அதற்குரிய பொறிமுறைகள் அவசியம். கடனை வாங்குவதற்கான பொறிமுறையைப் பற்றி இங்கே நான் குறிப்பிடவில்லை. கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான பொறி முறையைப் பற்றியே குறிப்பிடுகிறேன். அந்தப் பொறிமுறையைச் சரியாக வகுத்துக் கொண்டு அதை நடைமுறைப்படுத்தினால் கடன் எங்களை நெருக்கடிக்குள்ளாக்காமல் தப்பித்துக் கொள்ளலாம்.

எனவே தான் கடன் தரும் போது அவர்கள் சொல்கின்ற நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவதற்குப் பதிலாக (அதைச் செய்யத் தான் வேணும். இல்லையென்றால் கடன் தரவே மாட்டார்கள்) அதை மீளச் செலுத்துவதற்கான பொறிமுறையைப் பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

இதை மக்களுக்கு புரிய வைப்பது அவசியம். அரசாங்கம் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளும் என்ற எண்ணப் பாட்டிலிருந்து நாம் தான் அரசாங்கத்தை வழிநடத்த வேண்டும் என்ற உணர்வும் உண்மைப் புரிதலும் மக்களுக்கு வேண்டும். அதைப்போல அரசாங்கத்தை எல்லாவற்றுக்கும் எதிர் பார்த்துக் கொண்டிருக்காமல், அரசாங்கத்தில் எப்போதும் தங்கியிருக்க முற்படாமல் சுயமாக மக்கள் வாழ்வதற்குப் பழகிக் கொள்ள வேண்டும் என்ற தன்மையை அரசாங்கம் உருவாக்க வேண்டும்.

இந்தப் பரஸ்பரப் புரிதல் நிலைமையைச் சீராக்குவதற்குப் பெரிதும் உதவும். இதற்காகத்தான் தேசிய அரசொன்றைப் பற்றிப் பிரஸ்தாபிக்கப் ப டுகிறது. தேசிய அரசின் குணாம்சம் வேறாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பில் தான் அவ் வாறு கூறப்படுகிறது. ஆனால் அதையே நம்மால் எட்ட முடியவில்லை. பிறகெப்படி தேசிய நெருக்கடிக்குத் தீர்வைக் காணப் போகிறோம்?

இப்பொழுது தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகள் கூட எட்ட நின்றே வேடிக்கை பார்க்கின்றன. ஆனால், நெருக்கடிகளோ அனைத்து மக்களுக்கும் ஒன்றாகவே உள்ளன. இதையிட்டு யாருடன் பேசுவது?

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -

# குருந்தூர்மலை ஆக்கிரமிப்பு!

ஈழநாட்டிற்காக
யாழ்ப்பாணத்தில் இருந்து
- பார்த்தீபன் -

கோட்டா கோ கம போராட்டத்தில் தமிழ் மக்களும் இணைந்துகொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கப்படும் நிலையிலும் தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்புக்கள் தொடர்கின்றன. இவற்றையிட்டு போராடும் இந்த சிங்கள இளைஞர்கள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. சிங்கள மக்களுடைய பிரச்சினைகள் குறித்து மட்டும் தான் அவர்கள் கவலைப்படுவதாகவே தெரிகின்றது. இந்த நிலையில் இன நல்லிணக்கம் எப்படிச் சாத்தியமாகும்?

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குருந்தூர்மலை விவகாரம் மீண்டும் சர்ச்சைக்குள்ளாகியிருக்கின்றது. இந்த மலையில் உள்ள 'குருந்தாவசோக' ராஜமகா விகாரையில் புத்தர் சிலை மற்றும் புனித பொருட்கள் பிரதிஸ்டை செய்வதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட முயற்சி தமிழர் தரப்பால் முறியடிக்கப்பட்டிருக்கின்றது. நீதின்ற உத்தரவையும் மீறி இங்கு விகாரை ஒன்று அரசாங்கத்தின் ஆதரவுடன், இராணுவப் பாதுகாப்புடன் அமைக்கப்பட்டுள்ள நிலையில், அதன் அடுத்த கட்டமாகத்தான் இங்கு புத்தர் சிலையை பிரதிஸ்டை செய்வதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டது.

நாடு பாரிய பொருளாதார – அரசியல் நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நிலையில் தொல்பொருள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பௌத்த மகாசங்கத்தின் ஆதரவுடன் இராணுவப் பாதுகாப்புடன் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு ராஜமகா விகாரையின் விகாராதிபதி கல்கமுவே சந்தபோதி தேரர் பகிரங்கமாக அழைப்பு விடுத்திருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.



புதிய கட்டுமானப் 'பணிகள் எதுவும் இப்பகுதியில் இடம்பெறக் கூடாது என நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கும் நிலையில் அதனையிட்டு எந்தவிதத்திலும் அக்கறை செலுத்தாமல் இவ்வாறு பகிரங்கமாக அழைப்பு விடுக்கும் நிலையில் விகாராதிபதி இருந்துள்ளார். ஆனால், சட்டத்தையும் அமைதியையும் பாதுகாப்பதற்குப் பொறுப்பாக இருக்க வேண்டிய பொலிஸாரோ அவர்களுடைய இந்த சட்டவிரோத செயற்பாட்டுக்குத் தான் பாதுகாப்பு கொடுத்தார்கள். தமிழர்கள் அப்பகுதிக்குச் செல்வதைத் தடுத்தார்கள்.

குருந்தூர் மலையின் உச்சியில் ஆதிசிவன் கோவில் ஒன்று உள்ளது. இங்கு காலங்காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த பொங்கல் உள்ளிட்ட பூசை வழிபாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. இங்கிருந்த சூலம் பிடுங்கி எறியப்பட்டுள்ளது. சூலம் இருந்த பகுதியில் தான் பௌத்த விகாரைக்கான கட்டுமானப்பணிகள் இடம் பெற்றன. அதன் அடுத்த கட்டமாகத் தான் புத்தர் சிலையை பிரதிஸ்டை செய்வதற்கான முயற்சிகள் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

2018 இல் இங்கு உருவான சர்ச்சையையடுத்து குருந்தூர் மலைப்பகுதி தொல்பொருள் ஆய்வுப் பகுதியாகப் பிரகடனம் செய்யப்பட்டது. தொல்பொருள் ஆய்வுப் பகுதியாகப் பிரகட




னம் செய்யப்படும் ஒரு பகுதியில் புதிய கட்டுமானங்கள் எதுவும் செய்யப்படக் கூடாது என்பது பொதுவான விதி. அதற்கு மேலாக நிதிமன்றத் தீர்ப்பு ஒன்றும் இதனைத்தான் வலியுறுத்தியிருந்தது.

இருந்த போதிலும் தொல்பொருள் ஆய்வுப் பகுதி என்ற பெயரில் இந்தப் பகுதி வெளியாட்கள் யாரும் செல்ல முடியாமல் தடுக்கப்பட்டது. இதற்காக இராணுவப் பாதுகாப்பு போடப்பட்டது. இதற்கு மத்தியில்தான் அங்கு விகாரை அமைக்கும் பணி இடம் பெற்றிருந்தது. இந்தப்பகுதி தடைசெய்யப்பட்ட பகுதியாக மாற்றப்பட்ட பின்னர் இடம் பெற்ற தொல்பொருள் ஆய்வுகளின் போது பௌத்த சின்னங்கள் சில கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அரைகுறையாக சிதைவடைந்த நிலையில் பௌத்த விகாரை ஒன்றும் அங்கு காணப்பட்டதாக தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் தகவல் வெளியிட்டார்கள். அதன் அடிப்படையில் தான் பின்னர் புதிதாக பௌத்த விகாரையை அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது. படையினரின் பங்கேற்புடன் தான் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கம் பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கின்றது. எரிபொருட்களுக்காக மக்கள் தினமும் வீதிகளில் போராடுகின்றார்கள். உணவுப் பொருட்களின் விலைகள் எட்டமுடியாத உயரத்துக்குச் சென்றுவிட்டதால் நாட்டில் 80 வீதமான மக்கள் ஒரு நேர உணவைத் தவிர்த்துக் கொண்டிருப்பதாக ஒரு தகவல் உள்ளது. இதற்கு மத்தியில் இந்தக் கட்டுமானத்துக்குப் பாரியளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. கொழும்பிலிருந்து பெருந்தொகையான பிக்குகளும் சிங்கள மக்களும் இந்தப் பகுதிக்குச் சென்று வருவதற்கு போக்குவரத்து ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

பௌத்த விவகார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி இதற்காக முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றது. இந்த விடயத்தில் பௌத்த விவகார அமைச்சு, இராணுவம், தொல்பொருள் திணைக்களம் என்பன தெளிவான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்து செயற்படுகின்றன. நீதிமன்றக் கட்டளையையிட்டோ, தொல்பொருள் திணைக்களத்தின் பொதுவான விதிமுறைகளையிட்டோ அவர்கள் கவலைப்படுவதில்லை.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக ஒரு பகுதி அடையாளம் காணப்பட்டால் அப்பகுதியை பாதுகாப்பதற்கும் ஆய்வுகளை முன்னெடுப்பதற்கும்தான் தொல்பொருள் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும். புதிய நிர்மாணங்களை அங்கு மேற்கொள்ள முடியாது என்பது தான் தெல்பொருள் திணைக்களத்தின் விதி முறை. ஆனால், நடைமுறையில் சிங்கள மயமாக்கலை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளை தீவிரப்படுத்துவதற்கும், அதனை நியாயப்படுத்துவதற்குமான ஒரு கருவியாக மட்டுமே தொல்பொருள் திணைக்களம் செயற்படுகின்றது.

அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கதான் இந்தப் பகுதிக்குச் சென்று இந்த பௌத்த விகாரை அமைக்கும் பணிகளுக்குப் பின்புலமாக இருந்தவர். 'தொல்பொருள் ஆய்வுப் பணிகளே இங்கு முன்னெடுக்கப்படும். ஆக்கிரமிப்பு அல்ல' என தமிழத் தரப்புக்கு சமாதானம் கூறியிருந்தார். ஆனால், இவ்வருட ஆரம்பத்திலிருந்து இராணுவத்தின் முழுமையான பாதுகாப்பு




டன் விகாரைக்கான கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆய்வுப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவித்த தொல்பொருள் திணைக்களம் அனுராதபுர காலத்துக்குரிய சின்னங்கள் சில இங்கு கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவித்திருந்தது. இந்த ஆய்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட சின்னங்கள் தொடர்பாகவோ அவற்றின் வரலாற்று விளக்கங்கள் தொடர்பாகவோ வெளிப்படைத் தன்மையாக எதுவும் நடைபெறவில்லை. தமக்கேற்றவகையிலான பெறுபேறுகளைத் தான் தொல்பொருள் திணைக்களம் வெளியிட்டது. இது தொடர்பில் முரண்பாடான கருத்துக்களை தமிழ் ஆய்வறிஞர்கள் சிலர் முன்வைத்த போதிலும் அவை கவனத்திற் கொள்ளப்படவில்லை.

இருந்த போதிலும் வரலாற்றுத் தகவல்களின்படி 12 ஆம் நூற்றாண்டுப் பகுதியில் தமிழர்களும் பௌத்த மதத்தைப் பின்பற்றியிருக்கின்றார்கள். இதனை சிங்கள அறிஞர்கள் பலரும் முன்னர் ஏற்றிருந்தார்கள். ஆனால், இப்போது அவர்கள் அதனை மறைக்க முற்படுகின்றார்கள். வடக்கில் இருக்கக் கூடிய பௌத்த சின்னங்களை பயன்படுத்தி அந்தப் பகுதியை சிங்கள மயமாக்குவதை அவர்கள் தமது நிகழ்ச்சித் திட்டமாக மாற்றியமைத்திருப்பதால் தமிழ் பௌத்தர்கள் இருந்தார்கள் என்பதை அவர்கள் மறைக்கின்றார்கள்.

சிங்கள – பாளி இலக்கியங்கள் சில

இந்த குருந்தூர் மலை தொடர்பாக சில தகவல்களை வெளியிட்டிருப்பதாக தொல்பொருள் ஆய்வாளரான பேராசிரியர் புஸ்பரெட்ணம் தெரிவிக்கின்றார்.

13 ஆம் நூற்றாண்டில் தமிழருக்கு சார்பான அரசு ஒன்று இருந்தது – இதன் படைகள் இராணுவ மையம் இருந்த இடங்களில் ஒன்றாக இந்த குருந்தலூர் பகுதியை சிங்கள பாளி இலக்கியங்கள் தெரிவிக்கின்றன' என பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.

'11 ஆம் நூற்றாண்டில் பராக்கிரம பாகுவின் பர்மியப் படையெடுப்புக்கு தலைமை தாங்கியதும் ஒரு தமிழன் தான். அவனுடைய தலைமையிலான படை குருந்தூர் பகுதியிலிருந்தே புறப்பட்டது என பேராசிரியர் பரணவிதாரண வரலாற்று நூல் ஒன்றில் தெரிவிக்கின்றார்' என பேராசிரியர் புஸ்பரெட்ணம் சுட்டிக்காட்டுகின்றார். இதனை விட தமிழ் மொழியிலான கல்வெட்டுக்கள் பலவும் இங்கு கண்டெடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

ஆக, ஆய்வுகள் என்ற பெயரில் தொல்பொருள் திணைக்களம் வெளிப்படைத்தன்மையில்லாமல் தமக்குத் தேவையான பெறுபேறுகளை உருவாக்குகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது. இதனை எந்தளவுக்குத் தான் தமிழ்த் தரப்பினர் வெளிப்படுத்தினாலும் சிங்களத் தரப்பினர் அதனை ஏற்றுக்கொள்ளப் 'போவதில்லை. 'கோட்டா கோ கம'வில் நடைபெறும் போராட்டத்தில் தமிழர்களும் கலந்துகொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கப்படுகின்றது.

ஆனால், தமிழர்களின் மீது நிகழ்த்தப்படும் இவ்வாறான ஆக்கிர மிப்புக்கள் அவர்களின் கண்களில் படாத வரையில் தமிழ் மக்கள் அந்தப் போராட்டங்களில் எவ்வாறு இணைந்துகொள்ள முடியும்?

# மிலிந்த - ஸ்டாலின் சந்திப்பும் ஈழத்தமிழர் அரசியலும்!

கட்டுரையாளர்:
பேராசிரியர்
– K.T. கணேசலிங்கம் –

இலங்கை அரசியல் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்து கொண்டே செல்கிறது தற்போதைய நாணய நெருக்கடியை கடந்து அரசியல் கொந்தளிப்பு தீர்க்கப்பட முடியாத கட்டத்தை எட்டியுள்ளது. உணவுப் பொருட்



களின் நெருக்கடியை தீர்த்துக் கொள்ள இந்தியாவும், உலக நாடுகளும் பெருமளவு பிரயத்தனத்தை மேற்கொண்டு செயல்படுகின்றன.

இந்தியா, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் (IMF) உதவ முன்வந்தாலும் நடைமுறையில் இந்தியாவின் பங்களிப்பே கணிசமானதாக உள்ளது. இந்த சூழலில் சர்வதேச நாணய நிதியத்திற்கான ஆசிய–பசுபிக் பணிப்பாளராக இந்தியாவைச் சேர்ந்த கிஷ்ணா தெரிவாகியுள்ளார். சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியும் பேச்சுவார்த்தை நிலையிலேயே உள்ளது. இந்தியா மத்திய அரசும், தமிழக அரசுமே இலங்கைக்கு உதவிவரும் நிலை காணப்படுகிறது. இக்கட்டுரையும் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுடனான சந்திப்பு ஏற்படுத்தவுள்ள விளைவுகளை தேடுவதாக அமையவுள்ளது.

மிகப் பிந்திய நிலையில் இந்தியா அரசாங்கத்தின் இலங்கைக்கு எரிசக்தித் தேவைக்கு 500 அமெரிக்க டொலர் கடன் மற்றும் 200அமெரிக்க டொலர் வரிவகைக்கடன் வழங்க முன்வந்துள்ளது.

இந்தியா மேலும் 500அ.டொ. வரிக்குட்பட்ட கடனை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதே நேரம் 'Tan Binh-99' எனும் சரக்குக் கப்பலில் 9,000 தொன் அரிசி, 200தொன் பால் மா மற்றும் 24தொன் அத்தியாவசிய மருந்துகளுடன் இலங்கைக்கான தமிழக அரசின் உதவி சென்னையில் இருந்து புறப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இலங்கைக்கான் உதவி பற்றி ANI செய்திச்சேவையில் கருத்துத் தெரிவித்த தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் சுப்பிரமணியன், தற்போது, எட்டுக் கோடி இந்திய மதிப்பிலான மருத்துவப் பொருட்கள் இலங்கைக்கு அனுப்பப்படும். இந்த மருந்துகள் மனிதாபிமான அடிப்படையில் அங்குள்ள பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைவதற்காகவும் அவர்கள் இனவேறுபாடின்றி அனுப்பப்படுகின்றன என்றும் கூறினார்.

ஏற்கனவே கொழும்பு – புதுடில்லி உறவானது பலமானதாகவும் புரிதலுள்ளதாகவும் காணப்படும் போது மேலதிகமாக சென்னை–கொழும்பு உறவு பலப்படுத்தப்படுகின்ற சூழல் ஏற்பட்டுள்ளது.

தமிழகம் வழங்கும் உதவிகள் மனிதாபிமான அடிப்படையிலானவை என்பதில் மாற்று கருத்துக் கிடையாது. ஆனால் தென் இலங்கை இன்றைய பொருளாதார நெருக்கடியிலும் வடக்கு கிழக்கில் காணி ஆக்கிரமிப்பையும் விகாரைகள் அமைக்கப்படுவதையும் நிறுத்தாது செயல்பட்டு வருகிறதை அவதானிக்கும் போது சென்னையுடனான உறவை மனிதாபிமானத்திற்கு அப்பால் ஈழத் தமிழர் விடயத்தில் சென்னையை எப்படி கையாள வேண்டும் என்பதை செயல்படுத்த முனையும் என்பதில் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. அதிலும் இலங்கைக்கான அமைச்சரவை அந்தஸ்துள்ள தூதுவர் தலைவர்களை கையாளுவதில் ஆளுமை மிக்க ஒருவர் என்ற வகையில் தமிழக முதலமைச்சரை கொழும்பின் ஆதரவாளராக மாற்றுவதில் கவனம் கொள்வதில் வெற்றி அடைவார்.

இதற்கு ஆதாரமாக ஒரு விடயத்தை நினைவு கொள்வது பொருத்தமாக அமையும். கொழும்பு சென்னை உறவு பற்றி புரன்லைன் (Frontline) ஏடு இதனை ஒரு மாற்றமாகவும், இது இரு பிராந்திய மக்களிடையே மேம்பட்ட தொடர்புக்கு களம் அமைகத்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது. இத்தகைய மாற்றத்தின் போக்கு அதிக விளைவுகளைத் தரக்கூடியது. அவை புரிந்து கொள்ளப்பட வேண்டியது.

முதலாவது, தமிழக ஆட்சியின் நிர்ப்பந்தத்தாலும் தமிழக மக்களின் போராட்டத்தாலும் 1987ஆம் ஆண்டு இந்திய மத்திய அரசு ஒப்ரேஷன் பூமாலை எனும் இராணுவ நடவடிக்கையை மேற் கொண்டது. அதன் மூலம் இலங்கை இராணுவத்தின் ஒப்ரேஷன் லிபரேஷன் நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழருக்கு உணவுப் பொதிகளைப் போட்டதுடன் இலங்கை இராணுவத்தின் தாக்குதலையும் முடிபுக்கு கொண்டு வர காரணமாக அமைந்தது. அக்காலப் பகுதியல் ஈழத்தமிழரின் ஆயுதப் போராட்டத்தின் மீது அதிக கரிசனை கொண்டிருந்த தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன் மத்திய அரசுக்கு பாரிய அழுத்தங்களை கொடுத்திருந்தார்.

ஆனால் மிலிந்த மொறக்கொடவுடனான சந்திப்பில் மு.க.ஸ்டாலின் எந்த விதத்திலும் ஈழத்தமிழர் பற்றி ஒரு வார்த்தை கூட உரையாடியதாக தகவல் இல்லை. அதற்கு ஈழத்தமிழ் அரசியலை தாங்குவதாக கூறிக் கொள்ளும் தமிழ் அரசியல் வாதிகளும் முக்கிய காரணமானவர்கள் என்பதை மறுக்க முடியாது. ஈழத்தமழருக்கு ஆதரவான ஓர் ஆட்சி சென்னையில் மலந்துள்ளதை எந்த ஈழத்தமிழ் அரசியல் கட்சியினரும் கவனத்தில் எடுக்கவில்லை. வாழ்த்துக்களை மட்டும் ஊடகங்கள் வாயிலாக தெரிவித்து விட்டு கடமை முடிந்ததாக செயல்படுகின்றனர். அவர்கள் பாராளுமன்றத்தில் பேச்சுப் போட்டி நிகழ்திக் கொண்டு தென் இலங்கை ஜனநாயகத்தை மீட்டெடுக்க போராடுகின்றனர்.

அதற்காகவே தமிழ் மக்கள் தமது வாக்குகளை வழங்கி பாராளுமன்றத்திற்கு அனுப்பியுள்ளனர். தென் இலங்கையின் ஜனநாயகத்தையும் ஆட்சி அதிகாரத்தை பாதுகாப்பதே அவர்களது கடமையாக கருதுகின்றனர். ஈழத்தமிழ் அரசியல்வாதிகளுக்கு தென் இலங்கையில் நிகழ்வதையோ பிராந்தியளவில் தமிழருக்கு எதிராக நிகழும் விடயங்கள் பற்றி எந்த தேடலும் கிடையாது. அதனை அறிவதற்கு முயல்வதுமில்லை. ஸ்டாலின் தலைமையிலான ஆட்சி ஓராண்டைப் பூர்த்தி செய்துள்ள போதும் எந்த ஈழத்தமிழ் அரசியல்வாதியும் ஸ்டாலினை சந்திக்கவும் இல்லை தமிழ் மக்களது பிரச்சினை சார்ந்து உரையாடவும் இல்லை. இந்த சூழலில் எவ்வாறு தமிழர் பிரச்சினை சார்ந்து தமிழகம் செயல்படும்.

இரண்டாவது, கடந்த 27 இல் (மே மாதம்) இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமிழகம் வருகை தந்திருந்தார். அப்போது மு.க.ஸ்டாலின் கச்சதீவை மீட்பது பற்றிய கோரிக்கையை பிரதமரிடம் நேரடியாக வெளிப்படுத்தியிருந்தார். அது மட்டுமன்றி இலங்கைக்கு உணவளிப்பது தொடர்பில் நரேந்திர மோடி அதிக பிரயத்தனத்துடன் உதவிகள் தொடரும் என்று தெரிவித்திருந்தார். ஆனால் அந்த சந்தர்ப்பத்தில் எதிலும் ஈழத்தமிழர் பற்றிய உரையாடல் இருவரிடமிருந்தும் வெளிப்படுத்தப்படவில்லை.

இதனை அவர்கள் மீதான குறைபாடாக கருதுவதை விட அதனை அவர்கள் வெளிப்படுத்துவதற்கு ஏற்ப எந்த அடிப்படையான உரையாடலையும் ஈழத்தமிழ் அரசியல் வாதிகள் ஏற்படுத்தவில்லை. ஸ்டாலினும் பிரதமர் நரேந்திர மோடியும் ஈழத்தமிழர் விடயத்தை உரையாட வேண்டும் என்றும் தீர்வை முன் வைக்க வேண்டும் என்றும் கற்பனையாக அரசியல் நிகழ்த்தப்படுகிறது. இதனால் எத்தகைய மாற்றமும் சாத்தியப்படாது.


மூன்றாவது, இறுதிப் போருக்குப் பின்னரும் தமிழக மக்களின் எழுச்சிகள் தமிழக அரசை ஈழத்தமிழர் நலன் சார்ந்தே நகர்ந்துள்ளனர். தற்போது கூட இலங்கைக்கு வருகை தந்த பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலையின் ஈழத் தமிழர் பற்றிய உரையாடல் தனித்துவம் மிக்கதாகவே அமைந்திருந்தது. அது மட்டுமன்றி தென் இலங்கை எதிர்ப்புவாத உணர்வையே அவர் கொண்டிருந்ததுடன் 2009களுக்கு பின்னர் தென்னிலங்கையுடனான தமிழக உறவுகள் முற்றாக நிராகரிக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. தமிழக அரசை தமிழக மக்களே ஈழத்திழர் விடயத்தில் வழிகாட்டுபவர்களாக காணப்படுகின்றனர். அத்துடன் தென் இலங்கைக்கு எதிரான உணர்வுகளுடன் தமிழக மக்களது அர்பணிப்பான நடவடிக்கை தமிழக அரசை கொழும்புக்கு ஆதரவாக செயல்படாது தவிர்க்க உதவியது.

நான்காவது, தற்போதைய இலங்கைத் தூதுவர் புதுடில்லியின் நிலைப்பாட்டை கொழும்புடன் இணைப்பதில் வெற்றி கண்டது போல் இலகுவாக தமிழகத்தையும் இணைத்துவிடும் அரசியல் வேலைத் திட்டங்களில் கவனம் செலுத்தியுள்ளதை அவதானிக்க முடிகிறது. அதன் வெளிப்பாடே

(22ம் பக்கம் கபார்க்க)



# "கணவரைக் கொல்வது எப்படி" கட்டுரை எழுதி கணவரைக் கொன்ற எழுத்தாளருக்கு கிடைத்த தீர்ப்பு



உங்கள் கணவரை கொலை செய்வது எப்படி என்ற கட்டுரை எழுதியுள்ள அமெரிக்க பெண் எழுத்தாளர், தனது கணவரை கொன்ற குற்றத்திற்காக தண்டனைக்கு ஆளாகியுள் ளார். இந்த பரபரப்பு கொலை வழக்கி ற்கான தீர்ப்பை அமெரிக்காவின் ஓரே கான் மாகாண நீதிமன்றம் 14 யூன் 2022 வழங்கியுள்ளது.

அமெரிக்காவின் 71 வயதான நான்சி கிராம்ப்படன் என்ற எழுத்தாளர் தனது கணவரை கொலை செய்த புகாரில், அவர் மீதான வழக்கு விசாரணை ஒரு மாத காலமாக நடைபெற்று வந்தது. இவரது கணவர் டானியல் ப்ரோபி 2018ஆம் ஆண்டு ஜஜீன் மாதம் பணியிடத்தில் சுட்டு கொல்லப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டார்.

இவரது, கொலை தொடர்பாக காவல் துறை விசாரணை நடத்தும் போது, இவரது மனைவியின் மீது காவல் துறைக்கு சந்தேகம் எழுந்துள்ளது. சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில், எழுத்தாளர் அந்த நேரத்தில் சம்பவ இடத்திற்கு காரில் சென்று வந்தது தெரிய வந்துள்ளது. இதையடுத்த காவல்துறைக்கு சந்தேகம் வலுத்துள் ளது. அதன் அடிப்படையில் காவல் துறை நடத்திய விசாரணையில் இவர் தான் குற்றவாளி என உறுதி செய்யப் பட்டுள்ளது.

நான்சி இ-பே இணையதளம் மூலம் துப்பாக்கி வாங்கி இந்த கொலையை செய்துள்ளார். இதில் முக்கிய திருப்பு முனையாக இந்த எழுத்தாளர் சில ஆண்டுகளுக்கு முன்னர் உங்கள் கண வரை கொலை செய்வது எப்படி என கட்டுரை எழுதியுள்ளார். இந்த தம்பதி க்கு பொருளாதார ரீதியான நெருக்கடி நீண்ட காலமாக இருந்ததாகவும், கணவர் உயிரிழந்தபின் கிடைத்த காப்பீட்டு தொகையை பல்வேறு தேவைகளுக்கு எழுத்தாளர் நான்சி பயன் படுத்தியுள்ளது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த கொலை வழக்கில் நான்சி குற்ற வாளி என்பது உறுதியான நிலையில், இவருக்கு 25 ஆண்டு காலம் ஆயுள் தண்டனை வழங்கி நீதிமன்றம் தீர்ப்ப ளித்தது. வயது மூப்பின் காரணமாக நான்சிக்கு பரோல் வழங்கப்படும் என வும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது

## உலக வரலாற்றில் மாபெரும் சாதனை படைத்த பிரிட்டன் மகாராணி!



உலகில் நீண்ட காலம் ஆட்சி செய்த வர் என்ற சாதனையை பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத் படைத்துள்ளார். பிரித்தானியாவில் மகாராணி இரண்டாம் எலிசபெத் ஆட்சி பொறுப்பேற்று 70 ஆண்டுகள் நிறைவடைந்ததை, பிளாட்டினம் ஜீபிலி ஆண்டாக ராயல் அரண்மனை கொண்டாடி வருகிறது.

இந்த நிலையில் இரண்டாம் எலிச பெத் வரலாற்று சாதனை படைத்துள ளார். பிரித்தானியா ராச்சியத்தை 70 ஆண்டுகள் ஆட்சி செய்த ஒரே மகா ராணி இரண்டாம் எலிசபெத் தான்.

மேலும் 63 ஆண்டுகள் பிரித்தானி யாவை ஆட்சி புரிந்த விக்டோரியா மகாராணியின் சாதனையை முறியடி த்து, பிரித்தானிய வரலாற்றில் புதிய சகாப்தம் படைத்துள்ளார்.

அதே போல் நீண்ட காலமாக ஆட்சி செய்த தாய்லாந்து அரசர் பூமிபால் அதுல்யதேஜின் சாதனையை முறிய டித்து, உலகில் நீண்ட காலம் ஆட்சி செய்த மன்னர் அல்லது மகாராணி என்ற சாதனையை படைத்த இரண் டாவது நபர் எனும் பெருமையையும் பெற்றுள்ளார். கடந்த 1952ஆம் ஆண்டு, தனது 25வது வயதில் ராணி இரண்டாம் எலிசபெத் பிரித் தானியாவின் மகாராணியாக முடி சூட்டிக் கொண்டார். அந்த நிகழ்வு தான் உலகளவில் தொலைக்காட்சி களில் ஒளிபரப்பட்ட முதல் பிரம்மா ண்ட நிகழ்வு ஆகும். பிரான்ஸ் மன்னர் 14ஆம் லூயிஸ் 1643-1715 காலகட்டம் வரை 72 ஆண்டுகள், 110 நாட்கள் அரசராக இருந்தது இதுவரை மிகப்பெரிய சாதனையாக உள்ளது.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவ வேண்டியதன் அவசியம் தொடர்பில் வலியுறுத்தியிருக்கின்றார். இலங்கையின் பொருளாதார நெருக்கடி ஒரு மனிதாபிமான பிரச்னையாக மாற்றமடையலாமென்று, அண்மையில், ஐக்கிய நாடுகள் சபையும் சுட்டிக்காட்டியிருந்தது. எனவே, இவ்வாறானதொரு சூழலில் நாங்கள் இந்த விடயங்களை ஏறெடுத்தும் பார்க்க மாட்டோம் என்றவாறு அரசியல் பேச முற்படுவ தானது, அடிப்படையிலேயே தவறானதாகும்.

ஏனெனில், தமிழர்கள், நீதி கோரும் சர்வதேச சமூகம் முழுவதும், இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் மீதே கவனம் செலுத்துகின்றது. இந்த பின்புலத்தில் தான் அமெரிக்க தூதுவரும் சீனத் தூதுவரும் உரையாடியிருக்கின்றனர். இப்போ தாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விழித்துக் கொள்ள வேண்டும்.

பாராளுமன்றத்தில் பேசுவதுடன் கடமை முடிந்து விட்டதாக எண்ணிக் கொள்ளும் தமிழ்த் தேசிய அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்பது தொடர்பிலேயே அனைவரும் சிந்திக்க வேண்டும். பொருளாதார விடயங்களில் அமைதியாக இருப்பதால், ஒரே நேரத் தில் இரண்டு தீமைகளை எதிர்கொள்ள நேரிடும். ஒன்று, பொருளாதார நகர்வுகளில் தமிழ் தரப்பினருக்கு பங்கில்லாமல் போகும். இரண்டாவது, தமிழர்களுக்கு பொரு ளாதார முன்னேற்றத்தில் அக்கறையில்லையென்னும் புரிதல் சர்வதேச சமூகத்தின் மத்தியில் ஏற்படும்.


AC TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

கனடா ஈஸ்ற்கோஸ்ற் சுற்றுலா



6 இரவுகளும் 7 பகல்களும் கொண்ட பயணம்

2022 ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதத்தின் முதல் கிழமை

ரொறன்ரோவில் இருந்து புரப்பட்டு இரண்டாவது கிழமை திரும்பி வருதல்.

Quebec, Prince Edward Island, Nova Scotia & New Brunswick

ஆகிய 4 மாகாணங்களிலும் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களை பார்வையிடலாம்

- Hopewell Rocks
- Magnetic Hill
- Peggys Cove
- Charlotte Town
- Fisherman-House
- Cavendish-Beach
- Shediac
- Green Gables
- Swiss Air Flight
- Longest Covered Bridge
- Maritime Museum
- Reversing Falls
- Potato Farm
- Quebec City Tour
- st.joseph church
- and More...



a1actour.com@gmail.com

ஒருவருக்கு கட்டணம் C$ 800 மட்டுமே | 3 to 4 Star Hotel or Motel

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு (7 நாட்கள்) ஒரு கிழமை சுற்றுலாவுக்கு இந்த விலை

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது

முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இருக்கைகளின் இலக்கங்கள் ஒதுக்கப்படும்.

தங்குமிட வசதி | காலை உணவு | பேருந்து சேவை

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide, மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER

www.a1actour.com
facebook.com/Allcountriestour

416 644 7273 | 416 857 5252 | Cuba Cell: +53 555 915 57

# நீதிமன்றத் தீர்ப்பு:-புதிய அரசியலமைப்பு மாற்றத்திற்கு வழி வகுக்குமா?

இலங்கை அரசியலில் தற்போது முதன்மையான உரையாடலாக அரசியலமைப்பு சீர்திருத்தத்தினூடாக இலங்கையின் அரசியல், பொருளாதார நெருக்கடியை சீர் செய்வது தொடர்பிலான விவாதமே காணபட்படுகின்றது. குறிப்பாக கடந்த வாரம் 19ஆவது சீர்திருத்த ஏற்பாடுகளை மீள கொண்டுவரும் வகையிலான 21ஆவது சீர்திருத்தம் அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்டிருந்தது.

மேலும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனும் 21ஆவது சீர்திருத்தம் தொடர்பிலான உரையாடலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிகழ்த்தியிருந்தார் எனினும், 21ஆவது சீர்திருத்தம் தொடர்பில் எதிர்கட்சிகள் மாத்திரமின்றி ஆளும் கட்சியும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறது.

இந்நிலையில் அரசியலமைப்பு சீர்திருத்தம் மேற் கொள்ளப்படுமா என்பது தொடர்பில் அதிகளவு சந்தேகங்கள் இலங்கை அரசியல் பரப்பில் உலாவுகின்றது. அத்துடன் கடந்த வாரம் அரசியலமைப்பு ரீதியாக காணப்படும் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு அதிகாரத்தை கேள்விக்குட்படுத்தும் வகையில் அரசியலமைப்பு ரீதியாக கட்டமைக்கப்பட்ட நீதித்துறையே தீர்பளித்துள்ளது. இது இலங்கை அரசியலமைப்பின் இயல்பு தொடர்பிலான வாதங்களை உருவாக்கியுள்ளது.

அதிகார முரண்பாடுகள் நிறைந்த இலங்கை அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களினூடாக இலங்கையின் அரசியல் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி அரசியல் பொருளாதாரத்தை சீர்படுத்த இலங்கை அரசியலமைப்பின் இயல்புகள் வழி வகுக்குமா எனும் கேள்வியும் எழுந்துள்ளது. இக்கட்டுரை இலங்கை அரசியலமைப்பில் காணப்படும் விவாதங்களை தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

மே-31 அன்று இலங்கையின் உச்ச நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் ராஜபக்ஷ குடும்பத்திற்கு நெருக்கமான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி பொதுமன்னிப்பு இடைநிறுத்தி, அவரை உடனடியாக சிறையில் அடைக்க உத்தரவிட்டது.

2011 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8 ஆம் திகதி முல்லேரியாவில் உள்ளூராட்சித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஒரே கட்சியைச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷமன் பிரேமச்சந்திரவை துமிந்த சில்வா கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்றிருந்தார். இந்த சூட்டுச் சம்பவத்தில் மேலும் மூவர் பலியாகினர். இதனையடுத்து பாரத லக்ஷமன் பிரேமச்சந்திர கொலைக் குற்றச்சாட்டின் பேரில் துமிந்த சில்வா கைதானார்.

விசாரனைகளின் முடிவில் 2016ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 8ஆம் திகதி துமிந்த சில்வாவிற்கும் வேறு மூவருக்கும் கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தது. இருந்த போதிலும் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு பெரிதும் வேண்டப்பட்டவரான துமிந்த சில்வா 2011ஆம் ஆண்டு ஜீன் மாதம் 24 ஆம் திகதி ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலையானார். அத்துடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டார். இதனையடுத்து பாரத லக்ஷமன் பிரேமச்சந்திரவின் புதல்வியும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஹிருணிகா, அவரது மனைவி சுமுனா பிரேமச்சந்திர மற்றும் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் கசாலி ஹுசைன் ஆகியோர் மூன்று அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்ததையடுத்து தற்போது மீளவும் துமிந்த சில்வாவை சிறை வைக்குமாறு உயர் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது. ஜனாதிபதியின் பொதுமன்னிப்பும் நீதிமன்றத்தின் இடைநிறுத்தலும் அரசியலமைப்புக்கு உட்பட்தாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜனாதிபதி கோத்பய ராஜபக்ஷ தனது தேர்தல் வெற்றியினை தொடர்ந்து நான்கு மாதங்களுக்குள் தீவின் இரத்தகளரி இனப்போரின் போது நான்கு குழந்தைகள் உட்பட தமிழ் பொதுமக்களின் கழுத்தை அறுத்ததற்காக மரணதண்டனை விதிக்கப்பட்ட ஓர் இராணுவ அதிகாரியையும் பொது மன்னிப்பில் விடுதலை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



இத்தகைய அரசியலமைப்பு முரண்பாடுகள் இடம்பெறும் சமகாலப் பகுதியிலேயே கடந்த வாரம் 21ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்து ஊடகங்களிர்கு கருத்து தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரம சிங்க இது ஜனாதிபதியின் வரம்பற்ற அதிகாரங்களை கட்டுப்படுத்தும் அதே வேளையில் முன்னோடியில்லாத அரசியல் கொந்தளிப்பை எதிர் கொண்டுள்ள கடனில் சிக்கியுள்ள நாட்டை நிர்வகிப்பதில் பாராளுமன்றத்தின் பங்கை மேம்படுத்துவதாகக் கூறினார் இந்த பிரேரணைக்கு ராஜபக்ஷ குடும்பத்தின் விசுவாசிகளிடம் இருந்து குறிப்பாக முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் ஆதரவாளர்களிடமிருந்து எதிர்ப்பை சந்தித்துள்ளது. எனினும் ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ஷ ஆளும் சிறீலங்கா பொதுஜன பெரமுன பாரளுமன்ற உறுப்பினர்களிடம் 21ஆம் சீர்திருத்தத்திற்கு முழுமையாக ஆதரவளிப்பதாக தெரிவித்தார்.

பசில் ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் என நம்பப்படும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியலமைப்பு சீர்திருத்தங்களை விட மோசமான பொருளாதார நெருக்கடியில் உள்ள மக்களுக்கு பொருளாதார நிவாரணம் வழங்குவது மிகவும் முக்கியமானது என்று கருத்து தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி கோத்பய ராஜபக்ஷவுக்கு ஆதரவான வேறுசில பாரளுமன்ற உறுப்பினர்கள் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க சர்வதேச ஆதரவை பெறுவதற்கான அரசாங்கத்தின் முயற்சிக்கு அரசியலமைப்பு சீர்திருத்தங்களும் அவசியம் என்று வாதிடுகின்றனர்.

அரசியல் தரப்பினரின் மோதுகைக்கு அப்பால் இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணமாக ஜனாதிபதி அலுவலக நுளைவாயிலை ஆக்கிரமித்து கடந்த 50 நாட்களுக்கும் மேலாக முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் அரசியலமைப்பு மாற்றமும் பிரதான கோரிக்கையாக முன்வைக்கப்படுகிறது. விசேடமாக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவது தொடர்பான கோரிக்கையினையே போராட்டக்காரர்கள் முதன்மைப்படுத்தப் படுகின்றனர் இவ்வரசியல் கொந்தளிப்பை பயன்படுத்தியே பாராளுமன்றத்தின் கட்டமைப்பை மாற்றி புதிய அரசியலமைப்பு சீர்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை இருப்பதாக ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். 21ஆவது சீர்திருத்தத்தின் கீழ் ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்பு கூறுவார். அமைச்சர்களின் அமைச்சரவை பாரளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும். தேசிய கௌன்சிலும் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டும் 15 குழுக்கள் மற்றும் மேற்பார்வைக் குழுக்கள் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டுமென பொறுப்புக் கூறல் இங்கு முதன்மப்படுத்தப்படுகின்றது.

அரசாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக்க நம்புகிறதா அல்லது 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பை மாற்றம் செய்யுமா என்பது தற்போது அடிக்கடி கேட்கப்படும் கேள்வியாகும். தற்போதைய நடைமுறையில் அரசியலமைப்பு சீர்திருத்தத்தையே அரசாங்கம் முதன்மைப் படுத்துகிறது எனினும் 1978ஆம் ஆண்டு மூல அரசியலமைப்பின் இயல்புகள் சீர்திருத்தங்களினூடாக பொறுப்புக்கூறும் நிலைப்பாட்டை உருவாக்க வழி வகுக்குமா என்ற கேள்வியை பல தரப்பு மத்தியில் உருவாக்கியுள்ளது. இப் பின்னணியில் 1978 ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பின் இயல்புகள் சீர்திருத்தங்களின் ஊடாக பொறுப்புக் கூறும் நிலைப்பாட்டை உருவாக்க வழிவகுக்குமா என்ற கேள்வியை பல தரப்பு மத்தியில் உருவாக்கியுள்ளது. இப் பின்னணியில் 1978ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பின் இயல்பினை நுணுக்கமாக அவதானிக்க வேண்டியுள்ளது.

முதலாவது முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிற்கு ஜனாதிபதி வழங்கிய பொது மன்னிப்பும் அதனை நீதிமன்றம் இடைநிறுத்தி அளித்துள்ள தீர்ப்பும் அரசியலமைப்பிற்குள் காணப்படும் அரச கட்டமைப்புக்களுக்கு இடையிலான முரண்பாட்டு பிணைப்பையே சுட்டிக் காட்டுகிறது. நிறைவேற்றுத் துறையின் தீர்மானத்தை நீதித்துறை நிராகரிப்பது என்பது அரச துறைகளுக்கிடையிலான மோதலை வெளிப்படுத்கிறது இது ஜனநாயகத்தின் வலுவேறாக்கலை கேள்விக்குட்படுத்துகிறது. இவ்வாறானதொரு சூழல் அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையை பலவீனப்படுத்துவதுடன், துறைகளுக்கு இடையிலான போட்டிகளுக்குள்ளேயே அரச செயற்பாட்டை வழிநடத்தும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகமானதிலிருந்து

எப்போதும் உயர் நீதிமன்றம் நீதித் துறையில் பல்வேறு கட்டங்களில் நிறைவேற்றுத் துறையின் தலையீடுகள் இருந்து வந்தன. நிறைவேற்று துறையை அறிமுகப்படுத்திய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன தம்மால் நியமிக்கப்பட்ட உயர்நீதிமன்ற நீதி அரசர்களைக் கூட அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். அவ்வாறே முன்னால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது பதவிக்காலத்தில் முன்னால் நீதியரசர் சிறாணி பண்டாரநாயக்கவை பதவியில் இருந்து நீக்கியமை அதிக விமர்சனத்திற்குள்ளானது. எனினும், யாவும் அரசியலமைப்புக்குட்பட்ட நிறைவேற்றுத் துறை அதிகரத்திற்கு உட்பட்டதாகவே காணப்பட்டது. இவ்வாறான பின்னணியில் உயர் நீதிமன்றம் ஜனாதிபதிக்கு அரசியலமைப்பு ஒப்படைத்துள்ள பொதுமன்னிப்பு அதிகாரத்தை கேள்விக்குட்படுத்தியமை நீதித்துறை மீதான நம்பகத்தன்மையை உறுதி செய்துள்ளதாக அமைகின்ற போதிலும் இது அரசியலமைப்புக்கு உள்ளான முரணகை ஏற்பாடுகளையும் அரசியல் அமைப்பு குழப்பங்களையுமே வெளிப்படுத்துகின்றது.


இது நிறைவேற்று அதிகாரத்தை மட்டுப்படுத்துவதாக சிலாகிப்பது முரணான விடயமாகும். நீதிமன்றம் தீர்ப்பை நிராகரித்து செயற்படும் ஜனாதிபதியின் திறனை செயற்பாடுகளிலேயே விளங்கிக் கொள்ளக்கூடியதாக காணப்படும். எனினும் சமகால அரசியல் பொருளாதார நெருக்கடி அதற்கான வாய்ப்பை அரிதாக்குகிறது. சில சந்தர்ப்பங்களில் இராணுவ அதிகாரி கனில் ரத்னாயக்கவிற்கு ஜனாதிபதி வழங்கிய பொது மன்னிப்பை தமிழ்த்தரப்பு கேளிவிக்குட்படுத்துமாயின் ஜனாதிபதியின் அரசியலமைப்பு அதிகாரத்தைப் புரிந்து கொள்ள வாய்ப்பு அமையலாம்.

இரண்டாவது, இலங்கை அரசியலமைப்பு ஏற்பாடு செய்துள்ள ஜனநாயகம் என்பது பெரும்பான்மையினரின் ஆட்சி என்ற இயல்புக்குள்ளேயே பயணிக்கிறது. ஜனநாயகம் என்பது மக்கள் ஆட்சி கோட்பாட்டின் அடிப்படையாகும். எனினும் இலங்கை அரசியலமைப்பு கட்டமைத்துள்ள ஜனநாயகம் பெரும்பான்மையினரின் விருப்பைப் பூ ர்த்தி செய்வதாகவே அமைகிறது. அங்கு பெருமாபான்மையினர் என்கையில் ஓர் இனம் அறுதிப் பெரும்பான்மை சத வீதத்தை (சிங்களவர் 74.9வீதம்) கொண்டுள்ளமையால் முடிவுகள் பெரும் பான்மையின் விருப்பாகவே அமைகிறது. பல்லின சமூகம் வாழும் இலங்கை அரசியலமைப்பு பௌத்தத்திற்கு தனியான அந்தஸ்தின் ஊடாக விசேட பாதுகாப்பை வழங்குவதே இது பெரும்பாண்மை சமூகத்தை விருப்பை ஈடேற்கும் நிறுவனம் என்பதை வெளிப்படுத்தி நிற்கிறது.


அத்துடன் சம காலத்தில் அரசியல் அமைப்பு மாற்றக் கோரிக்கையானது பெரும்பான்மையின் சமூகத்திடமிருந்தே விடப்பட்டுள்ளது. அதனை செவிமடுத்தே அரசியலமைப்பு சீர்திருத்த ஏற்பாடுகளையும் அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. ஜனாதிபதி முன்னர் பெரும்பாண்மையின் ஆதரவுடன் நிராகரித்த 19ஆவது சீர்திருத்தத்தை மீளவும் பெரும்பாண்மையினத்தின் கோரிக்கைக்காகவே நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளார். அதிலும் பொருளாதார நெருக்கடி மாத்திரமே உள்வாங்கப்பட்டுள்ளது. ஈழத்தமிழர்கள் தேசிய இனப் பிரச்சினை தீர்வு கோரி முன்வைக்கும் எந்த விடயங்களையும் அரசாங்கம் உள்வாங்க தயாரில்லாத நிலையிலேயே காணப்படுகின்றது.

மூன்றாவது இலங்கை அரசியலமைப்பின் நிறைவேற்றுத்துறையும் மூல ஏற்பாடு மன்னர் வரவைத் தழுவி அமைக்கப்பட்ட இயல்புடையதாகவே காணப்படுகின்றது. பல வெளியீடுகளில் ஆசிய மனித உரிமைகள் ஆணையம் 1978ஆம் அண்டு அரசியலமைப்பானது பிரெஞ்சு அரசியலமைப்பின் கோலிஸ்ட் (டிகோல்) (22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! முயற்சிகளில் வெற்றி கிடைப்பதில் இருந்து வந்த தாமதம் நீங்கும். ஆக்கபூர்வமாக எதையும் செய்யும் எண்ணம் தோன்றும். அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான கடித போக்குவரத்தால் அனுகூலம் உண்டாகும். தொழிலை விரிவுபடுத்துவது தொடர்பான திட்டங்கள் தோன்றும். உத்யோகத்தில் மேலதிகாரிகள் கூறுவதை மறுத்து பேசாமல் அனுசரித்து செல்வது நன்மையை தரும்.





ரிஷபராசி அன்பர்களே! எல்லா விதத்திலும் நன்மை உண்டாகும். ராதியாதிபதி செவ்வாய் சஞ்சாரம் மனோ தைரியத்தை தரும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். அந்நிய நபர்களிடம் கவனமாக இருப்பது நல்லது.எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் அதிக உழைப்பின் மூலம் லாபம் கிடைக்கும். பொருளாதாரம் தொடர்பாக எடுக்கும் முயற்சிகள் சாதகமாக பலன் தரும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும்




மிதுனராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் எதையும் சாதகமாக செய்து முடிக்கும் திறமை அதிகரிக்கும். திட்டமிட்டபடி செயலாற்றுவீர்கள். வாகனங்களில் செல்லும் போதும், பயணங்களின் போதும் எச்சரிக்கை தேவை. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதுரியமான பேச்சினால் எதிலும் லாபம் காண்பர். வர்த்தக திறமை அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலையை துணிச்சலாக செய்து முடிப்பீர்கள்.





கடகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக முடங்கி கிடந்த காரியங்கள் வேகம் பெறும். தாய் தந்தையின் உடல் நிலையில் கவனம் செலுத்துவது நல்லது. தொழில் வியாபாரத்தில் மெத்தன போக்கு காணப்பட்டாலும் குருவின் இருப்பால் தேவையான பணவரத்து இருக்கும். புதிய முயற்சிகளில் தாமதமான நிலை காணப்படும். உத்யோகத்தில் பேச்சை குறைத்து செயலில் ஈடுபடுவது நன்மையை தரும். காரியங்கள் சுமூகமாக முடியும்.





சிங்கராசி அன்பர்களே! உங்கள் திறமையை கண்டு அடுத்தவர்கள் வியப்பார்கள். அலைச்சலை தவிர்ப்பதன் மூலம் களைப்பு ஏற்படாமல் தடுத்து கொள்ள முடியும். வேளை தவறி உணவு உண்ணாமல் பார்த்து கொள்வது நல்லது. பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். தொழில் வியாபாரத்தில் சாதுரியமாக செயல்பட்டு தட்டி கொடுத்து வேலை வாங்குவது நன்மையை தரும்.




கன்னிராசி அன்பர்களே! மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடக்கும்.விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். திருப்திகரமான லாபம் கிடைக்கும். பங்குதாரர்களிடம் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கும். கடினமான பணிகளை எளிதாக முடிக்கும் ஆற்றல் வரும்.





துலாம் ராசி அன்பர்களே! எதையும் சமாளிக்கும் திறமை உண்டாகும். சொந்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம். எதிர் பாலினத்தினரிடம் பழகும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். மருந்து, ரசாயனம் தொழில்களில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான காரியங்களில் அவசரப்படாமல் நிதானமாக செயல்படுவது காரிய வெற்றியை உண்டாக்கும். குடும்ப செலவை சமாளிக்க பணவரவு இருக்கும்.




விருச்சிகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக தடைபட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருந்தாலும் கொள்கைக்காக பாடுபடுவீர்கள். அடுத்தவர் சொல்வதை நம்பும் முன் அதைப் பற்றி ஆலோசனை செய்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் வாடிக்கையாளர் தேவை அறிந்து செயல்படுவது முன்னேற்றத்திற்கு உதவும். பணவரத்து அதிகரிக்கும். அரசாங்கத்தின் மூலம் உதவிகள் கிடைக்கும்.








தனுசுராசி அன்பர்களே! அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. மனதில் தைரியம் உண்டாகும். வீண் வாக்குவாதங்களால் பகையை வளர்த்து கொள்ளாமல் பார்த்து கொள்வது நல்லது. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில், வியாபாரத்தில் சாதூரியமான பேச்சின் மூலம் லாபம் அதிகரிக்கும். உத்யோகத்தில் அதிக உழைப்பும் அதற்கேற்ற பலனும் உண்டாகும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பணியிட மாற்றம் கிடைக்கும்.




மகரராசி அன்பர்களே! சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களை வெற்றிகரமாக செய்வீர்கள். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனமாக இருப்பது நல்லது. தைரியம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. நீண்ட நாட்களாக தொழிலில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். உத்யோகத்தில் இருப்பவர்கள் எதையும் ஆலோசித்து செய்வது நன்மை தரும்.




கும்பராசி அன்பர்களே! வீண் அலைச்சல் குறையும். சிக்கல்கள் தீரும். சுணங்கிக் கிடந்த காரியங்கள் வேகம் பெறும். சமூகத்தில் அந்தஸ்து உண்டாகும். தொழில் வியாபாரத்தில் மாற்றம் செய்ய எண்ணுவீர்கள். சிலர் புதிய தொழில் தொடங்க முற்படுவர். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் உண்டாகும். குறிக்கோளை அடைவது லட்சியமாக கொண்டு செயல்படுவீர்கள்.




மீனராசி அன்பர்களே! எதிர்ப்புகள் விலகும். தொல்லைகள் தீரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். வீண் கவலைகள் ஏற்பட்டு நீங்கும். கோபத்தை கட்டுப்படுத்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வேகம் குறைந்தாலும் திருப்திகரமாக நடக்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் கவனமுடன் செயல்படுவது நல்லது. உத்யோகத்தில் மற்றவர்களின் ஆலோசனையை கேட்டு செயல்படுவதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் குறையும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# கோத்தா + ரணில் அசுத்தக் கூட்டா?

(15ம் பக்கத் தொடர்ச்சி) ஆனால் கோத்தா- ரணில் கூட்டு அதற்கு உடனடியாகத் தயாரில்லை. கோட்டாபயவின் அதிகாரங்களைக் குறைத்து விட்டு அவரைத் தொடர்ந்தும் பதவியில் வைத்திருப்பதே அவர்களுடைய உள் நோக்கம்.

கோட்டாபய பதவி விலகத் தயார் இல்லை என்பதைத்தான் அண்மையில் அவர் அமெரிக்காவின் அவர் அமெரிக்காவின் ப்ளூாம்பேர்க் (Bloomberg) செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய செவ்வி காட்டுகிறது. தோற்றுப்போன ஜனாதிபதி என்ற பெயருடன் விலகிச் செல்ல முடியாது என்று அவர் கூறியிருக்கிறார் (Bloomberg) செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய செவ்வி காட்டுகிறது. தோற்றுப் போன ஜனாதிபதி என்ற பெயருடன் விலகிச் செல்ல முடியாது என்று அவர் கூறியிருக்கிறார்.

அதாவது தான் இப்பொழுது தோற்றுப் போயிருக்கிறார் என்பதனை அவர் ஒப்புக் கொள்கிறார். யுத்த வெற்றியை முதலீடாகக் கொண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்ற ஒரு குடும்பத்தின் பிரதிநிதி அவர். யுத்த வெற்றியை ஒரு குடும்பச் சொத்தாக மாறிய ராஜபக்சக்கள், அவர்களுக்கு முன்னிருந்த எல்லாத் தலைவர்களும் செய்த தவறுகளின் விளைவாக வந்த திரட்டப்பட்ட தோல்வியை சுமக்க வேண்டி வந்தமை என்பது இலங்கைத் தீவின் நவீன வரலாற்றில் ஒரு நகை முரண்தான் .நாட்டின் பொருளாதாரத் தோல்விகளுக்கு ராஜபக்சக்கள் மட்டும் பொறுப்பில்லை. ரணிலும் உட்பட இனப் பிரச்சினையை படைப் பலத்தின் மூலம் தீர்க்க முற்பட்ட எல்லாத் தலைவர்களுமே பொறுப்புத் தான். இவர்கள் எல்லாருடைய தொடர் தோல்விகளின் திரட்டப்பட்ட விளைவு தான் கோத்தா பயவின் தலையில் வந்து பொறிந்தது.

ஆனால் அவர் வெற்றி பெற்றவராகப் பதவி விலகுவாரா என்பது சந்தேகமே. ஏனென்றால் அவர் இனிப் பெறக்கூடிய எல்லா வெற்றிகளும் ரணில் விக்கிரமசிங்கவின் கணக்கில் தான் சேர்க்கப்படும். கோத்தா- ரணில் கூட்டு ஓர் அசுத்தக் கூட்டு என்று யாழ்ப்பாணத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அது ஒரு தந்திரக் கூட்டு.தோல்வியின் விளிம்பில் சிங்களத் தலைவர்கள் கட்சி பேதங்களைக் கடந்து எப்படி ஒருவர் மற்றவரைப் பாதுகாப்பார்கள் என்பதற்கு அதுவோர் ஆகப் பிந்திய உதாரணம்.

# மிலிந்த - ஸ்டாலின் சந்திப்பும்

(19ம் பக்கத் தொடர்ச்சீ0 தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுடான மிலிந்த மொறகொடவின் சந்திப்பு காணப்படுகிறது. தமிழக முதல்வருடனான சந்திப்பு அடுத்து தனது ருவிட்டர் பக்கத்தில் இச்சந்திப்பு தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த உதவும் எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே தெளிவான உரையாடலை தூதுவர் ஆரம்பிக்க இருகிறார் என்பதை கோடிட்டுக் காட்டுவதாகவே தெரிகிறது. எனவே கொழும்பு சென்னை உறவு வலுவடையுமாயின் ஈழத்தமிழர் அதிக விலை கொடுத்தும் மீள முடியாத நிலை ஏற்படும். ஸ்ரீபெரும்புதூர் சம்பவத்தை அடுத்து புதுடில்லியுடனான உறவை இழந்தது போல் தமிழக உறவை இழக்கும் நிலை ஏற்பட்டால் ஈழத்தமிழரது இருப்பு காணாமல் போய்விடும். ஈழத்தமிழருக்கான நட்பு சக்தியும் இல்லாது போவதுடன் நேசசக்தியாகவும் தமிழகம் செயல்படமுடியாத நிலை ஏற்படும். அதற்கான புள்ளிகளை கொண்டே கொழும்பு சென்னையை அணுக முற்படும் என்பதை புரிந்து கொள்வது அவசியமானது. இதற்கான எச்சரிக்கைகளை கருத்தில் கொள்ள தவறும் பட்சத்தில் முழுமை யான இழப்பினை ஈழத்தமிழர் எதிர்கொள்ள வேண்டிய நிலை தவிர்க்க முடியாததாகும். இவற்றை சரி செய்யும் நிலையில் ஈழத்தமிழருக்கான தற்போதைய அரசியல்வாதிகள் இல்லை என்பதை புரிந்து கொண்டு ஈழத்தமிழ் மக்கள் செயல்பட வேண்டிய நிலை எழுந்துள்ளது. அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலில் தென் இலங்கையை விட வடக்கு கிழக்கு தமிழர்கள் முழுமையான மாற்றத்தை நோக்கி நகரவேண்டியதன் தேவைப்பாடு ஏற்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் புதிய கட்சிகளையும் புதிய தலைமைகளையும் நோக்கி செயல்பட வேண்டிய தேவை அதிகரித்துள்ளது.

# நீதிமன்றத் தீர்ப்பு:-புதிய அரசியலமைப்பு

(21ம் பக்கத் தொடர்ச்சி) மாதிரியை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளதுடன் 2016ஆம் ஆண்டு அறிக்கையொன்றில் ஜே.ஆர். ஜெயவர்த்தன 1978 இல் ஜனாதிபதியாக முடிசூடினார். இருப்பினும் அவர் பிரதமராக மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜனநாயக ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட அனைத்துக் கோட்பாடுகளையும் அகற்றினார். ஒரு மன்னராக ஆசைப்பட்ட அவர் குடியரசு என்ற யோசனையைக் கைவிட்டார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையின் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பு உருவாக்கத்தில் முன்னோடியாக செயற்பட்ட சொல்லின் ஆர்.டி.சில்வா இந்த அரசியலமைப்பு எந்தவொரு பெரிய பாரம்பரியத்தின் அடிப்படையிலும் இல்லை என்றும் மத்திய ஆபிரிக்க குடியரசின் ஜீன்-பெடல் பொக்காசவால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பைப் போலவே உள்ளது என்றும் கூறினார்.

பொக்காசா ஆபிரிக்காவின் மிகக் கொடூரமான சர்வாதிகாரிகளில் ஒருவர். நரமாமிசம் மற்றும் தனது எதிரிகளை விலங்குகளுக்கு உணவளிப்பதாக குற்றம் சாட்டப்பட்டவர். 1979 இல் அவர் வெளியேற்றப்படும் வரை மத்திய ஆபிரிக்க குடியரசின் கிரீடம் சக்கரவர்த்தியாக இருந்தார். தனது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை மொத்தமாக செலவழித்தார் எளிமையாகச் சொன்னால் போகாசா தனது தனிப்பட்ட இலட்சியங்களுக்கு ஏற்ப ஆளுகையின் ஒவ்வொரு கொள்கையையும் கைவிட்டு அதன் விளைவா அவரது தேசத்திற்கு ஒரு பெரிய நெருக்கடியை உருவாக்கினார். இவ்வரலாற்று அனுபவத்துடன் கொல்வின் ஆர்.டி.சில்வா இலங்கையின் அரசியலமைப்பின் இயல்பே காரணம் என்பதையே வெளிப்படுத்துகிறது. எனவே இன்றைய இலங்கையின் அரசியல், பொருளாதார நெருக்கடியானது 1979 ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பின் இயல்பின் அடிப்படையிலானதாகும் இத்தகைய அரசியலமைப்பினை மாற்றாது மூல ஏற்பாட்டில் சீர்திருத்தங்களைக் கொண்டவர் முனைவது அரசாங்கத்திற்கு ஏற்பட்டள்ள அரசியல் நெருக்கடிகளை தற்காலிகமாக நீர்த்துப் போகச் செய்யும் செயலாகவே காணப்படுகிறது. மாறாக இலங்கையில் அரசியல் பொருளாதார நெருக்கடிகளுக்கு முழுமையான தீர்வை தரப் போவதில்லை அத்துடன் எதேச்சாதிகாரமிக்க ஆளுமை நிவேேற்றுத் துறையை அலங்கரிக்கையில் சீர்திருத்தங்களும் நீர்த்துப் போகக் கூடிய நிலையே தோன்றும். மக்களாட்சி இயல்பை வலியுறுத்தக் கூடிய வகையிலான ஜனநாயக அரசியல் அமைப்பை உருவாக்க பெரும்பாண்மையின் இயல்பை கொண்டமைந்த தற்போதைய அரசியலமைப்பு முழுமையாக மாற்றியமைக்கப்பட வேண்டியதே ஆரோக்கியமான முன்னேற்றமாகும். சமகாலத்தில் காலிமுகத்திடலில் இடம்பெறும் போராட்டங்கள் சமூக பரிமானத்தையே வெளிப்படுத்துகிறது எனவே பரினாமத்தை அதிகரிக்கும் பரிநாமத்தை எளிதாக்கும் பரிநாமத்தைத் தூண்டும் மேலும் பரினாமத்துடன் பரிநாம வளர்ச்சியடையும் ஓர் புதிய அரசியலமைப்பு உருவாக்கமே இலங்கை மக்களின் மாற்றத்திற்கான எதிர்பார்ப்பாக அமையும்.

தமிழ், சமய, சமூகப் பணிகளில் நீண்ட காலமாக
சேவையாற்றிவருபவரும் பல வருட காலமாக ஆசிரியப் பணிக்கு
அழகு சேர்த்தவருமான

## கௌரவ. ஸ்ரீமதி. மீனா தவரட்ணம்

அவர்களின்

சேவைநலத்தைப் பாராட்டி உரும்பிராய் பழையமாணவர்களின் அனுசரணையுடன்,
அவரது பழைய மாணவரும் தொழில் அதிபருமான திரு.சாந்தா பஞ்சலிங்கம் நடாத்தும்

# பாராட்டுப் பெருவிழா

JC'S BANQUET HALL
1686 ELLESMERE ROAD,
TORONTO, ONTARIO,
CANADA

**Saturday**
**July 2nd, 2022**
**6:30 PM**



உலகமெங்கும் வாழும் ஸ்ரீமதி தவரட்ணம் அவர்களின்
மாணவர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து
சிறப்பிக்குமாறு உரிமையுடனும் அன்புடனும்
வேண்டுகிறோம்.

**Kindly RSVP by June 20th, 2022**

உங்கள் அன்பான தொடர்புகளுக்கு.
சாந்தா பஞ்சலிங்கம் 416.200.5470 | info@santha.ca
Mohan 416.567.0144 | thavmohmt@gmail.com



மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
HOMELIFE
HIGHER STANDARDS
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6




RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)




மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life




OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*




RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500




அபாயம் உண்மையாகலாம்.
சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.
புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?
In Canada
Breast Cancer 1 woman in 8
Prostate Cancer 1 man in 7
Heart disease 1 person in 4
Stroke (CVA) 1 person in 20
Fortunately, more people are surviving these afflictions and living longer lives.
Survival Rate
Cancer 60%
Heart Attack 85%
Stroke 1 person in 4
Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.
- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years
BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%
Industry critical illness claim breakdown
Heart attack: 13%
Other: 16%
Stroke: 5%
Coronary surgery: 3%
Cancer: 63%
iA Financial Group
AJITH SABARATNAM
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.